ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்

முன்னேற்றத்திற்கு உழைக்கும்

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3 | தனிப்பிரதி அணா 4

மலர் 11 | 1950, ஆகஸ்ட்டு | இதழ் 8

கல்வித் துறையில் கம்யூனல், ஜீ. ஓ. அவசியமா?

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு எல்லோரும் சம
மென்பது உறுதியாச்சு" என்ற கீதத்தை, சுயராஜ்யம் பெற்ற
பிறகு பாலர் முதல் விருத்தர்வரை கூட்டங்களிலும், சினிமாக்
களிலும், ரேடியோவிலும் பாடக் கேட்டு மகிழ்ந்தோம்.

ஆனல் கடந்த 2-ஆண்டுகளாக இந்த கீதத்தின் ஓசை
கொஞ்சம் கொஞ்சமாக நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வரு
கிறது; நாமும் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டோம்.

கடந்த ஒருவாரமாக திடீரென்று ஓர் புதிய கீதம் தென்
னட்டில் குறிப்பாக தமிழ் நாட்டில் முழங்க ஆரம்பித்திருக்
கிறது. அதுதான் "வகுப்புவாரி முறை அடியோடு போச்சு
எல்லோரும் சமமென்று உறுதியாச்சு" என்பது. பாட்டும்

பாடுவதற்கு நன்றாகத்தான் இருக்கிறது; கருத்தும் கண்ணிய மாகத்தான் காணப்படுகிறது.

ஆனால் மாகாணம் முழுவதும் கல்லூரி மாணவர்கள் மாண் புடன் பவனி வருகிறார்கள், "வாழட்டும் வகுப்புவாரி முறை (Longlive Communal G. O.) என்று. நீதிமன்றம் தீர்ப்புக் கூறுகிறது "புதிய அரசியல் திட்டத்தில், வகுப்புவாரி முறை யில், ஜாதி, மதம், அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை கல்விச் சாலைகளில் சேர்க்கும் முறை, சட்டத்திலில்லையே என்று. "நமது மாகாணத்தில் கடந்த 30-ஆண்டுகளாக அமுலிலிருந்து வரும் வகுப்புவாரி முறை, அடியோடு சாய்கின்றதே, தேர்த லில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி என்னுவது, டெல்லி சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வதா, அல்லது சட்டத்தைத் திருத்த டெல்லிக்கு காவடி எடுப்பதா என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர் — ஆட்சியிலுள்ள நமது காங்கிரஸ் தோழர்கள். உணவுப் பஞ்சம் தான் நாட்டில் நடமாடுகிறதென் றால் இந்த காங்கிரஸ் ஆட்சியில், மாணவர்கள் படிக்கக் கூட கல்விச் சாலையில் இடங்கிடைக்காமல், அறிவு வளர்ச்சிக்கும் பஞ் சம் வந்து விடும்போல் இருக்கிறதே என்று ஏங்கி நிற்கின்றனர் 100-க்கு 97-பேர் உள்ள பிராம்மணர் அல்லாத சமுதாயத் தைச் சேர்ந்த மக்கள். இந்த விசித்திரமான, வேதனை நிறைந்த நிலையில் நமது மாகாணம் இன்று காட்சி அளிக்கிறது.

நமது மாகாணத்தின் ஜனத்தொகை 4-கோடி. இதில் நூற்றுக்கு 3-பேர் பிராம்மணர்கள். பிராம்மணர்கள் நூற்றுக்கு 3-பேராகயிருந்தாலும், அவர்களில் 100-க்கு 90-பேர் நன்றாக படித்தவர்கள். படித்தது மட்டுமல்ல; நாட்டில் பல முக்கிய உத்தியோகங்களை கைப்பற்றியுள்ளவர்கள். கைப்பற்றியதின் கார ணத்தால், நல்ல வாழ்க்கை வசதி, பணம், செல்வாக்கு, சொத்து, கட்டுப்பாடு எல்லாம் அவர்கள் அடைந்திருக்கின்றனர். பிராம் மணர் அல்லாத சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 100-க்கு 97-பேர். இதில் படித்தவர்கள் 100-க்கு 15. அதில் தற்குறிகள் 10-பேர். 5-பேர் படித்தவர்களில் 3-பேருக்கு 100-ரூபாய்க் குக் குறைந்த குமாஸ்தா உத்தியோகம், மற்றுள்ளவர்களுக்கு 2 அல்லது 3 பேருக்குத் தான் சில நல்ல உத்தியோகங்கள் கிடைத்திருக்கின்றன. இந்த மாகாணத்தில் அரசாங்கத்தை நடத்த பெரும்பகுதியாக வரிகளின் மூலம் பணம் கொடுப்பவர் கள் பிராம்மணர் அல்லாதார்; நாட்டின் நலனுக்காக உழுது, விதைத்து பயிரிடுபவர்கள் பிராம்மணர் அல்லாதார்; வண்டி யிழுத்தும், மூட்டை சுமந்தும், சம்மட்டி அடித்தும், தச்சு

வேலை செய்தும், கூட கோபுரங்களையும்; மாடமாளிகைகளையும், எழுப்ப கொல்லத்து வேலை செய்பவர்களும், பிராம்மணர் அல்லாதார். இவர்கள் நாட்டில் உழைத்து, உழைத்து அரசாங்கத்திற்கு வரி செலுத்தி, அந்த வரி வசூலினால் மான்யம் பெறும் பாடசாலைகளில் இவர்கள் பிள்ளைகளுக்கு படிக்க இடம் கிடையாது, படிக்காததினால் நல்ல உத்தியோகங்கள் கிடையாது, உத்தியோகங்கள் இல்லாததினால் வாழ்க்கை வசதி கிடையாது. இது 30-ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் இருந்த பிராம்மணர் அல்லாதார் நிலை.

இந்த மோசமான நிலையை உடனடியாக மாற்றவேதான், அன்றிருந்த, ஸர். பி. டி. தியாகராய செட்டியார், டாக்டர் நாயர், பனகல் அரசர், டாக்டர் நடேச முதலியார் போன்ற பல தலைவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஆலோசித்து **வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை (கம்யூனல் ஜீ. ஓ.)** போன்ற உத்தரவை பிறப்பித்து, 100-க்கு 3-பேர் உள்ள ஓர் குறிப்பிட்ட சமூதாயத்தார் மட்டும் எல்லா சலுகையையும் பெற்று படித்து முன்னேறி விட்டால், பிராம்மணர் அல்லாத சமூதாயம் நாளுக்கு நாள், நாட்டில், பஞ்சைப்பனாதைகளாய் பாமரர்களாய் பிற்போக்கடையக் கூடாதென்ற நல்லெண்ணத்துடன் நாட்டில் செய்த நல்லதோர் அரசாங்க உத்தரவாகும்.

இந்த உத்தரவு இந்த நாட்டு மக்களின் உயிர்நாடி. இந்த உத்தரவை திரு. ஸி. இராஜகோபாலாச்சாரியார் பிரதம மந்திரியார் காலத்தில் கூட அவர் அதை ஆதரித்து, இன்று காங்கிரஸ் ஆட்சியிலும் அசையாமல் 100-க்கு 97-பேர் உள்ள பிராம்மணர் அல்லாத சமுதாயத்தார்க்கு படிக்க வசதி, உத்தியோகங்களில் சலுகை கொடுக்கப்பட்டு, அன்று தாழ்ந்திருந்தசமுதாயம் இன்று ஓரளவு 100-க்கு 60-மாணவர்கள் கல்லூரிகளில் படிக்கவும், படித்து தேர்ச்சி பெற்ற காரணத்தால் பல இலாக்காக்களிலும் நல்ல உத்தியோகங்களைப் பெற்று, சற்று வாழ்க்கை வசதியிலும், எல்லாத் துறையிலும் படிப்படியாக உயர்ந்து கொண்டே வந்து கொண்டிருக்கின்றார்கள்.

1920-ல் S. S. L. C. பரீட்சையில் சென்ற மாணவர்களின் தொகை 20 ஆயிரம், இன்று 1950-ல் 68 ஆயிரம். அப்படியே கல்லூரிகளிலும் ஆயிரக்கணக்காக பிராம்மணர் அல்லாத மாணவர்கள் படித்துக் கொண்டு வருகிறார்கள்.

100-க்கு-3, ஜனத் தொகையுள்ள பிராம்மணப் பிள்ளைகள் கீழ்கண்ட புள்ளி விவரப்படி 1949-50 கல்லூரிகளில் இடம் பெற்றிருக்கின்றனர்.

இன்டர்	— 33·8	பி. ஏ. ஆனர்ஸ்—48·5
பி. ஏ. பி. காம்	— 38·6	என்ற சத விகிதத்திலும், என்
பி. எஸ். ஸி.	— 46·6	ஜினீரிங் கல்லூரியில், 1950ல்–20

சத விகிதம் என்ற முறையிலும், மருத்துவ கல்லூரியில், 24·4 சத விகிதத்திலும் இடம் பெற்றுள்ளனர்.

கம்யூனல் ஜீ. ஓ. பிரகாரம் பிராம்மணத் தோழர்கள் தங்களுக்கு விகிதாச்சாரப்படி கொடுக்கவேண்டிய அளவுக்கு மேல் சலுகைக் காட்டப்பட்டும், வகுப்புவாரி உத்திரவு எடுக்கும்படி கிளர்ச்சி செய்கின்றார்கள் - இந்திய யூனியனின் சட்டத்தைக் காட்டி. இந்திய யூனியன் சட்டத்தில், 45-வது பிரிவில், பிற்போக்கான மக்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு முக்கியமான பல உத்தியோகங்களை மாகாண அரசாங்கத்தார் கொடுக்க வேண்டும் என்று ஓர் உட்பிரிவு கண்டிருக்கின்றது. ஆனால் இத்தகைய உட்பிரிவு, ஜாதிமதம் இவைகளின் பேரால் கல்விச் சாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கத் தடை செய்யக்கூடாது என்று சொல்லப்படும் 15-வது பிரிவில், படிப்பில் பிற்போக்குள்ள மக்கள் படித்து முன்னேறுவதற்கு வகுப்புவாரி முறையில் பிள்ளைகள் சேர்க்கப்பட வேண்டும் என்ற விதியை அந்த உட்பிரிவில் சேர்க்கப்படவில்லை. இதைத்தான் பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்கள், சட்டத்தில் 45-வது ஷரத்தில் சேர்க்கப்பட்ட உட்பிரிவு 15–வது ஷரத்தில் சேர்க்கப்படாததற்கு காரணம் தெரியவில்லை. ஒன்று சட்டம் செய்தவர்கள் வேணும் என்றே விட்டிருக்கவேண்டும், அல்லது தங்களை அறியாமலே அது விடுபட்டுப்போயிருக்கவேண்டும் என்று, தெளிவாகஎடுத்துக்காட்டி இருக்கின்றார். நாம் பிள்ளைகளுக்கு புராணக் கதை சொல்லுவதுண்டு. அதில் சாவித்திரியின் புருஷனை சத்தியவான் உயிரை எமன் கொண்டு போய்விட்டான். ஆனால், சாவித்திரி தன் புருஷனிடம் இருந்த அளவுகடந்த அன்பினால் எப்படியாவது கணவனுடைய உயிரை பெறவேண்டும் என்று, எமனைத் தொடர்ந்து சென்றாள், பெண் என்றால் பேயும் இரங்குமல்லவா! அதுபோல எமன் பெண்ணின் மீது கருணைகூர்ந்து உன் கணவன் உயிரைத் தவிர எந்த வரம் வேண்டும் என்றாலும் கேள், கொடுக்கின்றேன் என்றான். அதற்கு அந்த அம்மையார் எனக்குப் பிள்ளை உண்டாக வேண்டும் என்று கேட்டார். அதற்கு எமன் தந்தோம் என்றார்; கணவனில்லாமல் பிள்ளைப் பெற இயலாதே, ஆகலால் தன் கணவன் உயிரைக் கொடுக்கும்படி கேட்டாள். அதைக்கேட்ட எமன் இந்த சாதாரண அறிவுநமக்கு விளங்காமல் ஏமாந்து விட்டோமே இப் பெண்மணியிடம் என்று திகைத்து

சத்தியவானுக்கு உயிர் கொடுத்தான் என்று சொல்வதுபோல் இருக்கின்றது, இந்த சட்டத்தின் அமைப்பும், சட்டம் செய்தவர்களின் நிலையும். சத்தியவானின் உயிர் போன்றது கம்யூனல் ஜீ. ஓ. இச் சட்டம் செய்த கமிட்டி மெம்பர்கள் 5-பேர். அதில் தென்னாட்டிலிருந்து போனவர்கள் இருவர். ஒருவர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் மற்றொருவர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். இருவரும் பிராம்மணத் தோழர்கள். மற்ற மூவரும் வடநாட்டு பிரதிநிதிகள்; அவர்களுக்கு இந்த நாட்டில் இருக்கும் வகுப்புவாதங்களும் ஜாதிமத பேதங்களும் முதலியவைகளைப்பற்றி தெரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ளாதவர்கள். ஆதலின் புரிந்து கொண்ட பிராம்மண தோழர்கள் வேண்டும் என்றேதான், தங்கள் சமூகத்திற்கு சாதகமாக விட்டிருக்க வேண்டும் என்று யூகிக்க வேண்டி இருக்கின்றது. அல்லது எமதர்ம ராஜனைப்போல் சற்று ஏமாந்து விட்டுவிட்டார்கள் என்று தான் சொல்ல வேண்டியிருக்கின்றது.

சட்டத்தின் 45-வது பிரிவில் நாட்டில் பிற்போக்கு மக்கள் மற்ற முற்போக்கு மக்களைப்போல் வாழ்க்கை வசதியில் சம அந்தஸ்தை அடைய வகுப்புவாரி முறையில் உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளபடி அவர்கள் உத்தியோகங்கள் பெற படிப்பு மிகமிக அவசியம். படிப்பிலும் முற்போக்கு சமூகத்தாரைப் போல் முன்னேறுவதற்கு வகுப்புவாரி முறை 15-வது ஸெக்ஷனில் சேர்க்கப்பட்டால் அல்லாது உத்தியோகங்களில் முற்போக்கு அடைய முடியாது. படித்தவர்களுக்குத்தான் உத்தியோகங்கள் கிடைக்கும். ஆதலின் வகுப்புவாரி முறைப்படி பிள்ளைகளைச் சேர்க்க வேண்டியது மிகமிக அவசியம், 45-வது ஸெக்ஷன் சொல்லுகிறபடி பிற்போக்கான மக்கள் முற்போக்கான மக்களோடு வாழ்க்கை வசதியில் சம உரிமை அடைய உத்தியோகங்கள் பெற வேண்டுமானல். ஆனல் இன்று பிராம்மணத் தோழர்கள் சட்டத்தின் 15-வது ஸெக்ஷனில் கல்வி விஷயத்தில் வகுப்புவாரி முறை குறிப்பிடாத காரணத்தினல் சென்னை அரசாங்கத்தார் அமுலில் வைத்துள்ள கம்யூனல் ஜீ.ஓ. செல்லுபடி ஆகாது, என்று சட்டமன்றம் ஏறி, வாதம் செய்து ஒழிக்க முனைந்திருப்பது அறிவுடைமையாகாது.

"வேலைக்காரி" என்ற ஓர் சினிமாப் படத்தில் அறிஞர் அண்ணாத்துரை, "சட்டம் ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஓர் விளக்கு!, அந்த விளக்கை ஏழைகளால் பெற முடியவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். 'இன்று செல்வத்திலும்

செல்வாக்கிலும் சீர்கெட்டு சிதறுண்டு ஏழைகளாய் இருக்கின்ற 100-க்கு 97-பேர்கள் அடங்கிய பிராம்மணரல்லாதார் சமுதாயம், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரைப் போலவும் வி. வி. சீனிவாச அய்யங்காரைப் போலவும் உள்ள பிரபல வக்கீல்களைக் கொண்டு நீதிமன்றத்தில் எப்படி வாதாட முடியும். ஆகவே கம்யூனல் ஜீ. ஓ. பிராம்மணர் அல்லாதார் சமூகத்திற்கு ஜீவ நாடிபோன்றது. கம்யூனல் ஜீ. ஓ. இல்லையென்றால் இவர்களுக்கு நாட்டில் வாழ்வு ஏது? வாழ்வு இருந்தாலும் வாழ்வில் வளம் ஏது? வளம் இருந்தாலும் மக்கள் மன்றத்தில் படித்தவர்கள் என்ற உயர்வு ஏது? உன்னத பதவி ஏது? 30-ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போல் படிப்பின்றி, பாமர நோய் சூழ்ந்து, பஞ்சைப்பஞ்சைகளாய் பகுத்தறிவற்று, மூடப்பழக்க வழக்கங்களில மூழ்கி, மதியிழந்து மந்தபுத்தியினராய்மறுபடியும் இந்த நாட்டில் காட்சியளிக்க நேரிடும். பிராம்மணர் அல்லாதார் சமூகம் கடந்த 30-ஆண்டுகளாக கம்யூனல் ஜீ. ஓ. இல்லையானால் இலட்சத்தி ஐம்பதாயிரம் ஆரம்ப ஆசிரியர்களை இந்த நாட்டில் காணமுடியாது. நாட்டில் ஆரம்பக் கல்வி வளர்ந்து 100-க்கு 14-பேராவது படித்திருக்கின்றார்கள் என்று சொல்லிக் கொள்ளவும் முடியாது. ஆரம்ப ஆசிரியர்கள் பெரும்பாலோர் பிராம்மணரல்லாதார் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது. ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்கு கம்யூனல் ஜீ. ஓ. உயிர்நாடி மட்டுமல்ல, வாழ்க்கையின் ஊன்று கோல்.

சட்டம் கம்யூனல் ஜீ. ஓ.-வுக்குமாறானதாக இருக்கலாம். இருந்தால் அதற்காக ஜீ. ஓ.-வை ஒழித்துவிட முடியாது. சட்டத்தை இயற்றுபவர்கள் மக்கள், வாழ்வதற்காக இருப்பது சட்டம், சட்டத்திற்காக மககள் வாழ்வதில்லை. ஆதலின் சட்டம் கம்யூனல் ஜீ. ஓ.-க்குமாறானதாக இருந்தால் கம்யூனல் ஜீ. ஓ.-க்கு தக்கபடி சட்டத்தை மாற்ற வேண்டியது—மக்கள் கடமை. ஆரம்ப ஆசிரியாகள் சமூதாயம் பெரும்பாலும் பிராம்மணர் அல்லாதார் சமுதாயத்தைக் கொண்டது. ஆதலின் கம்யூனல் ஜீ. ஓ. ஒழிந்ததென்றால் ஆசிரியர் சமுதாயம் வீழ்ந்தது என்றுதான் அர்த்தம். ஆதலின் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர் சங்கமும் கம்யூனல் ஜீ.ஓ.-வுக்குத் தக்கபடி இந்திய அரசியல் திட்டத்தை திருத்தி அமைக்கும்படி, அதற்கு உண்டான வழிவகைகளைச் செய்யும்படி சென்னை அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளும் முறையில், தீர்மானங்களை சங்கத்தில் கொண்டு வந்து தீர்மானித்து அரசாங்கத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

வாழ்க கம்யூனல் ஜீ. ஓ.

செய்தியும் - சிந்தனையும்

சென்னை மந்திரிகள் திறமையற்றவர்களாம்!

சென்னை மந்திரி மார்கள் நாட்டை ஆள திறமை அற்றவர்கள். அது மட்டுமல்ல, எந்த பொதுமக்கள் ஆட்சியிலும் ஏற்படுகின்றன அடங்காப்பிடாரிகளும் கூட, என்பதான அபிப்பிராயத்தை டெல்லி, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களுக்கு நான் சென்றபொழுது தவராக சென்னை மந்திரிகளைப்பற்றி பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றதைக் கண்டேன். இந்தச் செய்தியை யாராவது இந்த சட்டசபையில் மறுப்பார்களானால் அதை நான் நிரூபிக்கவும் தயாராய் இருக்கின்றேன்.

ஆனால் மற்றமாகணங்களில் இருந்து மந்திரிகள் டெல்லிக்குச் சென்றால், அத்தகையது ற் பிரசாரம்நடப்பதில்லை. விஷயங்களே வேறு விதமாக இருக்கின்றன.

சென்னையிலிருந்து பிரதிநிதிகள் செல்லுகின்றார்கள், ஆனால் சென்னை மந்திரிகளைப் பற்றி பரப்பப்பட்டுவரும் தப்பான அபிப்பிராயத்தை எதிர்த்து ஒரு அங்கத்தினராவது கண்டித்தவர்கள் இல்லை

ஆதலின் டெல்லி அரசாங்கத்தினரிடமிருந்து சென்னை மந்திரி மார்கள் தாங்கள் நினைக்கின்ற அளவு எத்தகைய உதவியும் சலுகையும் பெற முடியாது. டில்லியிலுள்ள பிரதம மந்திரி, உதவி மந்திரி, பரந்த நல்ல உள்ளம் படைத்தவர்கள். அவர்களிடம் முறையிட்டுக் கொண்டால்தான் ஏதாவது சில சலுகைகள் கிடைக்கும். மற்றவர்களிடம் சென்றால் ஒன்றும் நடவாமல், சென்னை அரசாங்கம் என்றாலே திரைப்போட்டு மூடி விடுவர்.

டாக்டர்

ஏ. லட்சுமணசாமி முதலியார்.

மேற்குறித்த கருத்தை 5-8-50-ல் மேல் சட்டசபையில் நடந்த ஒரு விவாதத்தில் பகிரங்கமாக எடுத்து காட்டியுள்ளார். அவர் மட்டுமல்ல நமது நிதி மந்திரி கோபால் ரெட்டியாரும் கூட அடிக்கடி சட்டசபையில் டில்லி அரசாங்கம் சென்னை அரசாங்கத்தை ஜில்லா போர்டு மாதரி நடத்தி வருகிறது, தக்க உரிமைகள் கொடுப்பதில்லை, கேட்கும் சலுகைகளும் வசதிகளும் செய்வதில்லை என்று குறைகூறிக் கொண்டுவருகிறார். ஆனால் S. S. ராஜன் அய்யங்கார் வடநாடு தென்னாடு என்று பிரித்துப் பேசாதீர்கள், நாம் எல்

லோரும் இந்தியத்தாயின் பாரத புத்திரர்கள், இந்தியர்கள், என்றெல்லாம் சட்டசபையில் பேசியிருக்கிறார், வடநாடு தென்னாடு வித்தியாசங்கள் வேண்டாம் என்று. லட்சுமணசாமிமுதலியார் சொல்லும் கருத்தை அலசிப்பார்த்தால் S. S. ராஜன், சுகாதார இலாக் மந்திரியாரின் வாதம் எப்படி பொருந்தும் என்று நமக்கு விளங்கவில்லை.

ஆரம்ப ஆசிரியர்களாகிய நாம் டெல்லி அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்ட சார்ஜெண்டு ஸ்கீம் பிரகாரம் ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் கிடைக்குமென்றும், சென்னை அரசாங்கத்தினிடம் தான் பணம் இல்லையே, டெல்லி அரசாங்கமாவது தென்னாட்டில் கல்வியைப் பரப்புவதற்கும், ஆசிரியர்கள் ஊதியத்தை உயர்த்துவதர்க்கும், வேண்டிய பொருளுதவி செய்யுமென்று மனப்பால் குடித்துக்கொண்டிருக்கின்றோம்: ஆனால் இன்று தென்னாட்டு அரசாங்கத்தைப் பற்றி வடநாட்டு மந்திரிகளும், பிரதிநிதிகளும் டெல்லி அதிகாவர்க்கத்தினரும் கொண்டுள்ள தாழ்ந்த அபிப்பிராயத்தை காணும்போது, தென்னாட்டு ஆசிரியர்களுக்கும் கல்வி வளர்ச்சிக்கும் போதிய பொருளுதவி டில்லி ஆட்சியாளர்களால் கிடைக்காதென யூகிக்க வேண்டியிருக்கின்றது.

ஆசிரியர் சங்கங்கள் அரசியல் கூட்டங்களாம்.

ஆந்திர ராஷ்டிரீய ஆரம்ப ஆசிரியர் சங்கத்தை, ஏன் அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை என்று திரு M. A. சலாம் குண்டூர் M. L. A, சட்டசபையில் கல்வி மந்திரியாரை ஒரு கேள்வி கேட்டார். அதற்கு அவர் ஆசிரியர் சங்கம் கல்விச் சம்பந்தமான சங்கமல்ல, அது அதிகமாக அரசியலில் ஈடுபட்ட சங்கமாக இருக்கின்றது என்று பதிலளித்தார். திரு M. A. ராகவையா நெல்லூர் M L. A அந்த ஆசிரியர் சங்கம் எந்த அரசியலில் ஈடுபட்டு வேலைசெய்கிறது" என்று ஒரு குறுக்குக் கேள்வி கேட்டார் அதற்கு மாதவனார், எத்தகைய அரசியல் சம்பந்தமான வேலை செய்தாலும், ஆசிரியர் சங்கங்கள், அரசியல் சங்கங்கள் என்று காணப்பட்டால் அவைகளை அரசாங்கம் அங்கீகரிக்காது என்று தெரிவித்தார்.

மெயில். 5-8-50

மக்கள் உயிர் வாழ தண்ணீரும் காற்றும் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் தொழிலும் அரசியலும்மனிதர்களுக்கு நல்ல முறையில் தங்கள் வாழ்க்கையை நாட்டில் நடத்த வேண்டுமானால். வாழ்க்கையும் அரசியலையும் பிரிக்க முடியாது. மனிதன் உழைக்கின்றான், உழைத்துவரும்

(41-ம் பக்கம் பார்க்க)

இளமையும் முதுமையும்

மனித சமுதாயத்தைப் பல வகையாகப் பிரித்தெடுத்துக் காட்டலாம். அவற்றுள் ஒன்று இளைஞர் முதியோர் என்ற பாகுபாடு.

மனித சமுதாயத்தைச் சேர்ந்த எல்லோரும் (உயிர்கள் எல்லாமுந்தான்) முதலில் இளமையின் இன்பத்தைச் சுவைக்கிறார்கள். பிறகு முதுமை வாழ்க்கையிற் புகுகிறார்கள். அன்பும் ஆர்வமும் ததும்ப, இன்பமும் எழிலும் ஒளி வீச, மாந்தர் இளமைக் கோலத்தில் முதலில் காட்சி தருகிறார்கள். இளமை வளர்ந்து வளர்ந்து முதுமைக் கோலத்தில் பின்னர் முடிகிறது. இது தத்துவமல்ல. அன்றாட வாழ்க்கை உண்மை. "இன்றைய இளைஞர் நாளைய முதியோர். இன்றைய முதியோர் நேற்றைய இளைஞர்" என்பது என்றும் எங்கும் உண்மையாய் இருக்கிறது. இளமையின் செறிவு முதுமை என்பதும், முதுமையின் முன்னன் வாழ்வு இளமை என்பதும் முரண் தொடை போல் காண்கிறது—ஆனால் அது முரண்தொடை அல்ல; எல்லோர்க்கும் தெரிந்த, எல்லோரும் தம்தம் வாழ்க்கையில் நேருக்கு நேர் காண்கிற மிக எளிய ஓர் அடிப்படை உண்மை.

முன் கூட்டியே ஒன்றைச் சொல்லி விடுவோம். இளைஞர் யார்? முதியோர் யார்? என்று திட்டமாய் வரையறுத்துக் கூற முடியாது. இத்தனை வயதானால் இளைஞர், இத்தனை வயதானால் முதியோர் என்று கூற இயலாது. இளமை கொஞ்சங் கொஞ்சமாக மாறி முதுமையில் முடிகிறது. இளமையின் திரிபு முதுமை. திடுதிப்பென ஒரே நாளில் மனிதன் இளமை நிலையினின்று முதுமைக்குப் பாய்ந்தோடிப் போவதில்லை. எனவே எந்த வயதில் இளமை முதுமையாய்த் திரிபடைகிறது என்பதை நிலைகாட்ட முடியாது தான்.

மேலும் நாட்டுக்கு நாடு இளமை — முதுமை வயது மாறும். இங்கிலாந்தில் நாற்பது தாண்டு நிரம்பியவன் இளைஞன். இந்தியாவில் அவன் முதியவன்; அல்லது முதுமை வாயிலை அணுகி விட்டவன்.

அதோடு, இளைஞர், முதுமைத் தன்மைகளில் சிலவற்றைத் தம்முடையனவாக்கிக் கொள்ளுதலாலும் முதியர் இளமைப் பண்புகளில் சிலவற்றைத் தாம் ஏற்றுக் கொள்ளுதலாலும் இளைஞர் இவர் முதியர் இவர் என்று திட்டமாய்ப் பிரித்தெடுத்துக் கூறுவது இயலாததுதான்.

ஆனாலும், இளமையும் முதுமையும் தனித் தனிப் பண்புகளாக, வெவ்வேறு குணங்குறி சாயல்கள் உடையனவாக, வேறு வேறு திறமும் தன்மையும் அமைந்தனவாக இருத்தல் கண்கூடு.

* * *

அதோ ஒருவன் "நாலுகால் பாய்ச்சலில்" மடமடவென நடந்து செல்கிறான். ஒரு குதி குதித்து ஓடோடி வருகிறான். எப்போதுமே அவன் ஓட்டமும் நடையுமாய்த்தான் காணப்படுகிறான், வீரமும், எழுச்சியும், தெளிவும் தீரமும், ஆட்டமும், பாட்டமும் அவனுடைய சொந்த சொத்து. இளமை வீறு அவன்பால் பொங்கித் ததும்புகிறது. உயிர்ப்பாற்றல் நிறைந்த உணர்ச்சிச் சித்திரம் அவன். மலை குலையினும் மனங் குலையாத மாண்பு யுடையான் அவன். அசையாத உறுதியில் அடங்காத பற்று நிரம்பியவன் அவன். அஞ்சாமைச் செல்வத்தில் தோய்ந்தெழுந்த நெஞ்சம் அவனுக்கு உண்டு. **அவன் இளமைத் திறம் உடையவன்; இளைஞன்.**

இதோ ஒருவன் அடிமேல் அடிவைத்து நடந்து வருகிறான். ஒவ்வொரு முறை அடியெடுத்து வைக்கும் போதும், மேற்கொண்டு நடக்கலாமா வேண்டாமா என்று நின்று நினைத்து நடப்பான் போலக் காணப் படுகிறான். தட்டுத் தடுமாறி நடை கூட்டுகிறான். அது மட்டுமல்ல, சில சமயங்களில் ஒவ்வொரு சொல்லையும் எண்ணி எடைபோட்டுத்தான் பேசுகிறான். வேறு சில சமயங்களில் "கடல் மடை திறந்தாற்போல்" தனக்குத் தெரிந்ததை எல்லாம் கொட்டி விடுகிறான். எப்படிப் பேசினால் என்ன, சொற்களுக்கு அடிப்படையில் இயல்பாய் இருக்க வேண்டிய வீரம் இவன் சொல்லில் இல்லை. சொல் தளர்ந்து, சொல்லின் எழில் தளர்ந்து, உடல் தளர்ந்து, உடலிடைப் பிறக்கும் உயிர்ப்பாற்றல் தளர்ந்து காணப்படுகிறானே **இவன் முதுமைத் தன்மை உடையவன்; முதியவன்.**

இளைஞனின் நெஞ்செல்லாம் அஞ்சாமை; சொல்லெல்லாம் எழுச்சிப் பாசுரம்; அவன் செயலெல்லாம் வீர காதை; அலுப்பும் களைப்பும் அவனை அண்டுவதில்லை. சலிப்பு அவனைத் தீண்டுவதில்லை.

இளமை ஒரு கொந்தளிக்கும் கடல்; ஒரு குமுறும் எரிமலை; சுழன்று சுழன்றடிக்கும் ஒரு சண்ட மாருதம். இன்ன வேளையில் அது இன்னது செய்யும் என்று சொல்ல முடியாது. இளமை புன்முறுவல் பூத்த முகத்துடனே நடனமாடிக் கொண்டிருக்கும் — திடீரென்று புரட்சிப் புயல் வீசும். செடியும் கொடியும் பின்னிப்

பரந்து கிடக்க, இளந் தென்றல் வீச, கனி குலுங்கும் சோலைகளில் புது மலர்கள் பூக்க, அமைதியை இன்பத்தை அள்ளிப் பொழிகின்ற சில அழகிய குன்றங்கள் இருந்தாற் போலிருந்து அடர்ந்த நெருப்பை அள்ளி அள்ளி வீசும் எரிமலைகளாய் மாறி விடுவதுண்டு. அத்தகைய தன்மை உடையது தான் இளமை.

முதியவன் அறிவு நிரம்பியவன், ஆராய்ச்சி உள்ளம் அறிந்தவன், எதனையும் நின்று நிதானித்துச் செய்பவன். பழக்கம் தந்த பக்குவத்தைத் துணை கொண்டு செயலாற்றுபவன். எதைச் செய்தால் என்னவிளையுமோ என்னும் அச்சம்கொண்டவன்.

இளைஞனோ துடிதுடிப்புடையவன்; எந்தச் செயலையும் உடனே முடித்து விடவேண்டும் என்னும் மனக் கொந்தளிப்பில் அலைபவன்; இதுசெயின் என்ன விளையுமோ என்னும் பயம் சிறிதும் இன்றி அச்சம் அற்ற இளங்காளை எனத் துள்ளி வினையாற்றுபவன்.

முதியவன் உள்ளத்தில்பழங்காலக் கருத்துக்களும் பண்டைய நாகரிகமும் முன்னாள் வாழ்வியலும் ஆழப் பதிந்து கிடக்கும். பெரும்பாலும்புதுக் கருத்தும் புது வாழ்வும் புது நிலையும் முதுமைக்குப் பிடிப்பதில்லை.

ஆனால் இளைஞன் உள்ளத்தில் புரட்சி வாடை வீசும். புத்தம் புதிய கருதுக்துகள் புதுக் கோலம் பூண்டு அங்கு நடமாடும். சீர்திருத்த ஆர்வம் சிரித்து விளையாடும்.பழமையில் வெறுப்பும் புதுமையில் ஆர்வமும் அங்குண்டு.

அப்பக்கம் இப்பக்கம் பார்த்து அஞ்சும் இயல்பு முதுமைக்கு. அச்சம் அற்ற இளங் காளையின் உள்ளம் இளமைக்கு,

உணர்ச்சி, ஊக்கம், உறுதி, உற்சாகம்-இவற்றின் தொகுப்பு இளமை. அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் அமைதி —இவற்றின் கூட்டு முதுமை. இளமை உள்ளத்தில் அஞ்சாமை அரசோச்சும். முதுமை உள்ளத்தில் பக்குவமும் பொறுமையும் நிதானமும் 'என்ன அவசரம் என்னும் மனப்பான்மையும் நிழலாடும். "விரைந்தெழு விழித்தெழு" என்றுரைப்பது இளமை. "கொஞ்சம் பொறு மெள்ளப்போ" என நவில்வது முதுமை. கட்டுக் கடங்காது வீராவேசத்துடன் விரைந்தோடும் காட்டாற்று வெள்ளம்—இளமை. ஆழ்ந்து அமைந்து செல்லும் நீர் ஓட்டம் முதுமை.

* * *

மனித சமுதாயத்தின் வாழ்க்கை முன்னேற்றம் இரு வழியில் நிகழ்த்தப் பெறல் வேண்டும். ஒன்று, எய்ப்பில்வைப்

பாக நம் முன்னோரிடமிருந்து நாம் பெற்ற நாகரிகத்தை—நாகரிக வாழ்வியலை—அவ் வாழ்வின் வழி துறைகளைக் காப்பது. மற்றது இன்றைய வாழ்க்கையைச் செப்பனிட்டு சீர்திருத்திப் புது உலகப் பாதையில் சமுதாயத்தைச் செலுத்துவது. முன்னாள் நாகரிகமும் வாழ்க்கைத் திட்டமும் வழிமுறைகளும் அக்கால நிலைமைக்கும் சுற்றுச் சார்புக்கும் ஏற்றனவாய் அமைக்கப் பெற்றவை. அவற்றுள் சிலபல இக்காலத்திற்கு ஏலாதனவாய் இருக்கும். காலத்திற்கு ஒவ்வாத நடைமுறைகளை மாற்றி அமைத்து மறுகோலம் செய்ய வேண்டுவது முதன்மையான சமுதாயப் பணி.

உள்ள நாகரிகத்தைக் காக்கும் முதற் பணியைச் செய்வது முதுமை. உள்ள நாகரிகத்தைச் சிறப்பாக்கும் இரண்டாவது பணியாற்றுவது இளமை,

சில சமயங்களில், இளமை, எத்தெந்த சமுதாயத் திட்டங்களை உடைத்தெறியவேண்டும் என்று கருதுகிறதோ, எத்தெந்த எண்ணங்கள் ஏற்பாடுகளை—கொள்கை கோட்பாடுகளை வெட்டி வீழ்த்த வேண்டும் என்று நினைக்கிறதோ, எவ்வகை அமைப்புகளை வெடி வைத்துத் தூள் தூளாய்த் தகர்த்தெறிய எண்ணுகிறதோ அதே திட்டங்களை, அதே எண்ணங்கள் ஏற்பாடுகளை, அதே கொள்கை கோட்பாடுகளை, முதுமை காக்க எண்ணுகிறது. ஆகவே இளமை—முதுமைப் போர் மூள்கிறது.

புத்துலகச் சிற்பிகட்கும் பழங்காலக் கருத்தினர்க்கும் இடையே இப்படித்தான் போர் மூள்கிறது. வைதீக வட்டாரத்திற்கும் சீர்திருத்தச் சூழலுக்கும் இடையே இப்படித்தான் போர் விளைகிறது.

இளமையும் முதுமையும் ஒன்றை ஒன்று உணர மறுப்பதாலும், உணர்ந்தாலும் ஒரு நிலைப்பட்டுச்செல்ல மறுப்பதாலும், சிலபோது இரண்டிற்கும் இடையே பிளவு உண்டு என்பதை மறைப்பதாலுமே இப் போர் மூளுகிறது.

இளமைக்கும் முதுமைக்கும் இடையே இருக்கவேண்டிய உறவுமுறை நேரிய முறையில் உணரப்படாத இதே காரணத்தால்தான் சமுதாயப் பிணக்குகள் மட்டுமல்ல, வீட்டுப் பிணக்குகளும் நிகழ்கின்றன.

தமிழ் நாட்டில் கூட்டுக்குடித்தனமுறைஉள்ள வீட்டிலெல்லாம் மாமியார்—மருமகள் போராட்டம் நிகழ்வது எல்லாரும் அறிந்ததே. இது இளமைக்கும் (மருமகள்) முதுமைக்கும் (மாமியார்) இடையே நிகழும் போரன்றி வேறென்ன? இது போன்றவையேதான் பல குடும்பங்களில் காணப்படும்

தந்தை மகன் போரும் அண்ணன்—தம்பி பிணக்கும் இன்னபிறவும்—ஆகும். இளமையும் முதுமையும் தத்தமக்குரிய வாழ்க்கைத் திட்டத்தையும், பொறுப்பு கடமை—எண்ணம் ஏற்பாடுகளையும் தெளிவாய், திட்டமாய், உணர்ந்துகொள்ள ஒவ்வாமையே இத்தனைக்கும் காரணம்.

அப்படியானால், இளமைக்கும் முதுமைக்கும் இடையே இருக்கவேண்டிய நல்லுறவை ஏற்படுத்தும் வழி என்ன?

நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும், இளமையின் தனிப் பண்பு துடிதுடிப்பு. முதுமையின் தனிப்பண்பு, அமைதி. இரண்டும் வாழ்க்கைக்குத் தேவை.

முதுமையில் பிறப்பது அநுபவம். இளமையில் கொழிப்பது வீரம். வீர உணர்ச்சியை அனுபவ நுகர்ச்சியுடன் பிணைத்து, இரண்டின் தொகுப்பைச் செயலாற்றுந் திறத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இளமையில் ததும்புவது ஆற்றல். முதுமையில் சிறப்பது அறிவு. அறிவும் ஆற்றலும் என்னும் இரண்டு உருளையால் நடப்பது வாழ்க்கை.

இளமையின் ஆற்றலை முதுமை உணரவேண்டும். முதுமையின் பக்குவ உணர்ச்சியை இளமை அறியவேண்டும். அப்போதுதான் இரண்டிற்குமிடையே பூசல் நிகழாது.

முதுமை தன் அநுபவத்தைச் சொல்லாமல், ஆராய்ச்சியைக் கொட்டலாம், நெஞ்சில் நடமாடும் நினைப்பை அழுத்தந் திருத்தமாய் எடுத்துக் கூறலாம். "என்னுடைய அநுபவத்தை, அறிவை, ஆராய்ச்சியை உன் உணர்ச்சி வேகத்துடன் பொருத்திப் பார்த்து உன் செயல் திறத்தைச் சரிக்கட்டிக் கொள்" என்று இளமைக்கு அறிவுறுத்தலாம். இவ்வளவும் செய்யலாம்; தப்பில்லை, ஆனால் இளமையின் முற்போக்குக்கு முதுமை தடை விதிக்கக் கூடாது. புது உலகம் அமைக்கவும், இருக்கும் வாழ்வை இனிய வாழ்வாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்யவும், வாழ்க்கைக்குத் தேவையான புதுப்புது மாறுதல்களை நடைமுறைக்குக் கொண்டுவரவும் ஏற்ற கருவி இளமைதான். முதுமைக்கு இம் மாறுதல்களில் சிலபல பிடிக்காமல் இருக்கலாம். சில சமயங்களில் இளமையின் வேகம் அளவுக்கு மீறியது என்று முதுமை கருதலாம். அச் சமயங்களில் முதுமை தனக்கு வேகமாகத் தோன்றுவது இளமைக்கு அப்படித் தோன்றாது என்பதையும், தனக்குப் புரட்சிகரமான திட்டங்கள் என்று தோன்றுபவை இளமைக்கு மிக மெதுவான திட்டங்

ளாய்க் காணப்படும் என்பதை யும் நெஞ்சில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தென்றலே வீசாதே என்று சொன்னால், நெருப்பே நீ சுடாதே என்றால், அலைமோ தாங் கடலை அடங்கி இரு என்று உரைத்தால் எப்படியோ, அப்படித்தான் இளமையைக் கொந்தளிக்காதே என்று சொல்லி அடக்கிவைக்க எண்ணுவதும். ஆனால் யார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நெருப்பு சுடும்; தென்றல் வீசும்; கடலில் அலை மோதிக் கொண்டுதான் இருக்கும்; இளமையும் கொந்தளிக்கத்தான் செய்யும்.

நெருப்புச் சுடும்.ஆனால் சுடும் நெருப்பை உணவு சமைக்க, இருப்புவண்டித்தொடர் ஓட்ட, பஞ்சாலைகளை இயக்க, தொழிற் கூடங்களுக்குள் "சக்தி" தரப் பயன்படுத்திக் கொள்ளலாம், அறிவும் அதற்கேற்ற பக்குவமும் இருந்தால்.

அதைப்போலத்தான் இளமையின் கொதிப்பை கொந்தளிப்பை இளமைதரும் வீராவேசத்தை— வினைத்திறத்தை, இளமையிற் பிறக்கும் உணர்ச்சியை – எழுச்சியை மனித, சமுதாயத்தின் நன்மைக்கு என்று திருப்பிவிடலாம், அதற்கேற்ற மனத்திடம் இருந்தால். இங்கேதான் முதுமை பயன்பட வேண்டும்.

எப்போதாவது இதற்கு மேல் போக முதுமை, எண்ணினால், இளமையின் உயிர்ப்பாற்றல் நிறைந்த துடிதுடிப்பையே அடக்கிவிட முதுமை நினைத்தால்,கொந்தளிக்கும் உள்ளமே கொஞ்சம் துடுக்கடங்கிக் கிட என்று இளமைக்கு முதுமை அறிவுறுத்தினால், இளமைக்கும் முதுமைக்கும் போர் மூண்டால், முதுமை அழிக்கப்படும்; இளமை வெல்லும். பழமை அழிக்கப்படும் புதுமை வெல்லும்.

இது வரலாறு புகட்டும் பாடம்.

"கோயாளித் துருக்கி" என்று பிறநாட்டவரால் இழித்துரைக்கப்பட்ட நாட்டை அறிவும் திறனும் செறிந்த நாடு என்று இன்று பிறநாட்டவர் போற்றும் வண்ணம் மாற்றி அமைத்து மறுகோலஞ் செய்த துருக்கிப் புரட்சி நமக்கெடுத்துக் கூறுவது இது தான்.

அஞ்சி அஞ்சிக் கிடந்த ஏழை மக்கள் உள்ளத்தில் புரட்சிப் புயல் வீசச்செய்து, மன்னர்களைச் சாய்த்து, மக்கள் வாழ்வை வதைத்து வந்த பல ஏற்பாடுகளை உடைத்தெறிந்து புதியதோர் சமுதாயத்தை உருவாக்கிக் காட்டிய சோவியத் புரட்சி நமக்கெடுத்துக் காட்டுவதும் இதைத் தான். (15-ம் பக்கம் பார்க்க)

எங்கிருந்தோ வந்தான்! இதயத்தில் இடம் பெற்றான்!

MAY 1955

மா. இளஞ்செழியன் B A. (Hons) ஆசிரியர் (போர்வாள்)

இன்றைய தினம், பிரிட்டன் அமெரிக்காவின் தயவைப் பெற்றாலொழிய வாழமுடியாது என்னும் பரிதாபகரமான நிலைமையில் இருக்கிறது. ஆனால் ஒருகாலம் இருந்தது, அமெரிக்கா பிரிட்டன் கிழித்த கோட்டைத் தாண்ட முடியாதிருந்த காலம். அந்தக் காலத்தில், மூன்றாம் ஜார்ஜ் பிரிட்டிஷ் தீவுகளுக்கு மன்னர்! ஆனால், அமெரிக்காவுக்கே, அவர் சக்கரவர்த்தி! அமெரிக்கா, அப்போது பிரிட்டனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பல காலனிகளில் ஒன்று; ஓர் அடிமைப் பிரதேசம்! பிரிட்டிஷ் துரைமார்கள்' பீரங்கிகளின் துணையைக் கொண்டு அமெரிக்காவை அடிமைப் படுத்தி ஆணவத்துடன் ஆண்டு வந்த காலம் அது. அந்தக் காலத்தில், அமெரிக்காவில், பிரிட்டிஷ் அதிகாரிகள் இட்டது தான் சட்டம், வைத்தது தான் கட்டளை, அடக்குமுறை ஆட்சியின் அடையாளச் சின்னங்களாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நடமாடும் உருவங்களாக, ஏதேச்சாதிகாரத்தின் பிரத்தியேக தூதுவர்களாக அங்கே கொலுவீற்றிருந்தார்கள் அந்த அதிகாரிகள். அதிகார வெறி பிடித்த அந்த ஆங்கிலேய துரைமார்களின் ஆணவ உள்ளம்தான் அந்தக்காலத்தில் அமெரிக்காவுக்கு "பார்லிமெண்ட்" அந்த ஆணவ உள்ளத்தில் நடமாடும் நச்சு நினைப்புகள்தாம் அமெரிக்க எம். எல். ஏ.க்கள்! அந்த நச்சு நினைப்புகளில் தலைசிறந்து விளங்கிய அடக்குமுறை எண்ணங்கள்தான் மேன்மை தங்கிய மந்திரிகள்! இத்தகைய அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றமும்தான் அந்தக் காலத்தில் அமெரிக்காவில் இருந்தனவே தவிர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களின் நம்பிக்கையைப் பெற்ற மக்களிடத்திலிருந்து பிறந்து வளர்ந்து உருவாகிய அமைச்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

மூட நம்பிக்கை என்னும் பலம் பொருந்தி பழங்காலக் கட்டுப்பாட்டில் கட்டுண்டு 'இருட்டறையில் உள்ளதடா சீனம்' என்று கண்டோர் ஏசும் வண்ணம் வாழ்ந்து வந்த பழைய சீனாவைப் புது முறுக்கும் இளமை வீறும் படைத்த இளைய சீனமாகத் திருத்தியமைத்த சீனத்து மறுமலர்ச்சி நமக்கு உணர்த்தும் பாடமும் இதுவே. (போர்வாள்)

சர்களோ, சட்டமன்றமோ, மன்ற உறுப்பினர்களோ இருந்தது கிடையாது. அமெரிக்கா ஓர் அடிமைக் கூடாரமாக இருந்தது. அந்தக் கூடாரத்தின் சொந்தக்காரனாக, சூது மதியினனாக, சுரண்டல் உள்ளத்தவனாக இருந்தது பிரிட்டன். அமெரிக்கா சிந்திய வியர்வையை பிரிட்டன் தன் வாழ்க்கை வயலை வளமாக்கும் நீராகப் பயன் படுத்திக் கொண்டது. அவர்களுடைய உழைப்பை உறிஞ்சி உண்டு கொழுத்து உல்லாச வாழ்வு வாழ்ந்தது. அமெரிக்க அரசியல், அமெரிக்க வாணிபம், அமெரிக்க வயல்கள், அமெரிக்கத் தொழில்கள், அனைத்தையும், பிரிட்டன் தன்னுடைய சொந்த லாபத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான சிறந்த கருவிகளாக மாற்றி அமைத்துக் கொண்டது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், பிரிட்டனின் கொடுங்கோல் ஆட்சியில் சிக்கிச் சிதைந்து செத்தவாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தது அமெரிக்கா.

கொடுமை அதிகமானால் புழுவும் எதிர்த்துப் போராடும், என்பார்கள். பலவீனன் உடலிலும் சில சமயம் சிம்மத்தின் இரத்தம் ஓடும் என்பார்கள். நீர்த்துளிகளிலும் ஒவ்வொரு வேளை நெருப்பின் தன்மை உண்டாகும் என்பார்கள். அமெரிக்க இளைஞர்கள் புழுக்களுமல்ல, பலவீனர்களுமல்ல, நீர்த்துளிகளுமல்ல — சீறிப் போரிடும் சிங்க ஏறுகள். எனவே அவர்கள் பிரிட்டனின் கொடுங்கோன்மையை நீண்ட நாட்கள் பொறுத்துக் கொள்ள எழுந்து போராட எண்ணினார்கள் என்றால் அது வியப்புக்குரிய நிகழ்ச்சி அல்ல. எவரும் எதிர்பார்க்க வேண்டிய சாதாரண செய்தியே ஆகும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில், விடுதலை ஆர்வம் ததும்பும் உள்ளமும், உயிரைக் கொடுத்தேனும் உரிமையை மீட்போம் என்னும் உறுதியும் படைத்த அமெரிக்க இளைஞர்கள் ஆயிரமாயிரவர் ஒன்று திரண்டு, ஒரு பட்டாளமாக உருவாகி, ஆயுதம் ஏந்திப் போரிடலாயினர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போர் திக்கெட்டும் பரவலாயிற்று. வட்டாரந் தோறுமிருந்து மக்கள், புதிய புதிய பட்டாளங்களாகப் புறப்படலாயினர். குடியானவர்கள், கடைக்காரர்கள், கூலி வேலை செய்பவர்கள், வண்டி ஓட்டுபவர்கள், இளம் மாணவர்கள் ஆகிய பல்வேறு திறத்தினர் கரத்திலும் போர்வாள் ஒளி வீசலாயிற்று. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே வெளியேறு என்னும் வீர முழக்கம் அமெரிக்க நாட்டையே அதிரச் செய்தது. பிரிட்டிஷ் இராணுவம் ஓர் புறமும் அமெரிக்க மக்களின் பட்டாளம் மற்றோர் புறமும் நின்று ஒருவரை ஒருவர்

எதிர்த்துப் போர்புரியலானார்கள். பீரங்கி சத்தத்திற்குப் பலம் அதிகமா அல்லது மக்கள் சக்திக்கு ஆற்றல் அதிகமா என்னும் பலப் பரீட்சை நாடெங்கும் நடைபெறலாயிற்று. "எங்கட்கு ஆட்சியில் உரிமையில்லை—எனவே இனி வரிகொடுக்கும் உத்தேசமில்லை" என்று அமெரிக்க நாட்டு மக்கள் அனைவரும் சீமைத் துரைகளைப் பார்த்து சிறும்சிறுத்தைகளென கர்ஜனை புரியலாயினர். எலிகள் புசிக்க எல்லாம் கொடுத்தே சிங்க ஏறுகள் ஏங்கிடுமோ? புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே ஒரு புதரினில் தூங்கிடுமோ? என்ற கிண்கிணி கீதம் காற்றிலெல்லாம் மிதந்துவரலாயிற்று. கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுந்தோம்! இனிக் கெஞ்சும் உத்தேசமில்லை! வலிவுடையோம் இன்ப வாழ்வுடையோம் இந்த வார்த்தைக்கு மோசமில்லை, என்னும் சொற்கள் ஒவ்வொரு அமெரிக்கர் உள்ளத்திலிருந்தும் வீறிட்டுக் கொண்டெழலாயின.

இவ்வண்ணம் திடீரெனச் சுழன்றெழுந்து அமெரிக்கா முழுவதையும் கனல்கக்கும் ஓர் பயங்கர எரிமலையாக மாற்றி அமைத்த அமெரிக்க விடுதலைப் போராட்டத்தின் சுவைமிக்க வரலாற்றில் மற்ற அனைவரையும் விட இருவர் பெயர்களே பேரொளி வீசித் திகழ்கின்றன. ஒருவர், அமெரிக்க விடுதலைப் பட்டாளத்தைத் தலைமைதாங்கி நடத்தி அதை வெற்றிபுரிக்கு விரைவில் கொண்டு சேர்த்த தளபதி வாஷிங்டன். மற்றவர், அந்தப் பட்டாளத்தின் போராட்ட சக்தி தளர்ச்சியுற்ற போது தன்னுடைய விறுவிறுப்பான கட்டுரைகள் என்னும் "பெனிசிலின் இஞ்செக்ஷன், மூலம் அந்தத் தளர்ச்சியை நீக்கி எழுச்சியை யூட்டிய பேனா மன்னர் **தாமஸ் பெயின்.**

வாஷிங்டன் அமெரிக்க மண்ணிலே பிறந்து வளர்ந்தவர்; அமெரிக்கச் செடிகொடிகளுக்கிடையே குழந்தைப் பருவத்தைக் கழித்தவர். அமெரிக்க மொழியைத் தாய் மொழியாய்க் கொண்டவர். அமெரிக்க நாடே அவருடைய வாழ்க்கைத்தொட்டில். அவர் அமெரிக்கா ஈன்றெடுத்த குழந்தை. எனவே அவர் அமெரிக்க விடுதலைப் போராட்டத்திலே உற்சாகத்துடன் ஈடுபட்டு உணர்ச்சியுடன் போராடியதில் வியப்பேதுமில்லை; ஆனால் தாமஸ் பெயின் அமெரிக்கரல்லர், ஆங்கிலேயர்! என்றாலும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆணவக் கோட்டை மீது வெடிகுண்டுகளை வீசுவதிலே போரார்வம் காட்டினார். எனவேதான் தாமஸ் பெயினின் செயல் கண்டு அமெரிக்க நாடே திகைத்தது. "கொடுமை செய்பவர் என் நாட்டவராய் இருந்தால் மட்டுமென்ன, அதனால்

கொடுமை நன்மையாக மாறுமோ? தீமைச் செயல் தூய பணியாகுமோ? எதிர்த்தே தீருவேன் இக்கொடுமையை!ஒழித்தே தீருவேன் இந்த அதிகார மமதையை!” என்று அவர் சூளுரை புகன்றபோது, அமெரிக்கர்;இவ்வளவு பரந்தஉள்ளம் படைத்த பெருந்தகை ஒருவரை நாங்கள் இதுவரைகண்டதில்லையே என்று வாய்விட்டுக் கூறி மகிழ்ந்தனர். சுதந்தரம் மனிதனின் பிறப்புரிமை என்று அவர் வீர முழக்கம் புரிந்த போதும், ஆங்கில ஆட்சியின் கொடுமைகளை அவர் நிரல் நிரலே எடுத்து விளக்கிய போதும், மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் மமதைப் போக்கை அவர் அலசி ஆராய்ந்து காட்டிய போதும், அமெரிக்கர், இவரல்லவா விடுதலை வீரர், இவரல்லவா சிறந்த எழுத்தாளர், இவரல்லவா அறிஞர் தலைவர், இவரல்லவா எம் இதயம் கவர் கள்வர் என்றெல்லாம் சொல்லிக் களித்தனர். அமெரிக்காவிலேபிறந்து, அமெரிக்காவிலே வளர்ந்து, அமெரிக்க உணவை உண்டு, அமெரிக்கக் காற்றை உட்கொண்டு வாழும் அமெரிக்கர்களிலே கூட பலருக்கு அமெரிக்காவின் மீது இவ்வளவு பற்று இல்லையே,இவருக்கு எவ்வளவு பற்று இருக்கிறது நம் நாட்டின் மீது என்று வியந்து வியந்து பேசினர். தாமஸ் பெயின் தீட்டிய ஒவ்வொரு கட்டுரையையும் ஒவ்வொரு புதுப் பட்டாளமாகக் கருதிப் போற்றினர். அமெரிக்காவுக்கு வந்து தங்கி ஓராண்டு முடிவதற்குள் அமெரிக்கர் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் தனக்கென்று விசாலமான இடம் ஒன்றை ஒதுக்கி வைத்துக் கொண்டார் தாமஸ் பெயின். இப்படிச் செய்து விட்டார் இந்தப் பொல்லாத மனிதர் என்பது அமெரிக்கருக்கும் தெரியாமலில்லை. தெரிந்தது, தெரியாமலேதான் அவர்கள் **“எங்கிருந்தோ வந்தான், பெயின் எம் இதயத்தில் இடம் பெற்றான்”** என்று ஆனந்த கீதம் இசைக்கலாயினர்.

இதுபோல அமெரிக்க மக்கள் மன்றத்தில் ஆநந்தத் தென்றலை வீசச் செய்த விடுதலை வீரர் **தாமஸ் பெயின். 1737ம்** ஆண்டு, லண்டன் நகருக்கு அண்மையில் உள்ள தெட்போர்ட் என்னும் இடத்தில் பிறந்தார். அவருடைய தந்தை, பெண்களுக்கு ரவிக்கை தைத்துக் கொடுத்து அதன் மூலம் கிடைக்கும் சிறு ஊதியத்தைக் கொண்டு எப்படியோ பொழுதை ஓட்டி வந்தார். தாமஸ் பெயினும், தன் பிள்ளைப் பருவத்தைக் கடந்து வாழ்க்கைப் பாதையில் பயணத்தைத் தொடங்கியதும் முதன் முதலில் பயிற்சி செய்த தொழில் இந்த ரவிக்கை தைக்கும் வேலை தான். பின்னர் அவர் அதில் வெறுப்புற்று செருப்

புத் தொழிலாளியாக மாறினார். சில காலம் நெசவு ஆலை ஒன்றில் தரையைப் பெருக்கித் தூய்மை செய்யும் வேலைக்காரனாக இருந்தார். நான்கு ஆண்டுகள் கலால் இலாகாவிலும் சில ஆண்டுகள் பள்ளிக்கூட ஆசிரியர் வேலையிலும் பணியாற்றினார். புகையிலை வியாபாரியாகவும் கொஞ்ச காலம் இருந்து பார்த்தார்! தச்சு வேலை, பீப்பாய் விற்கும் வேலை முதலிய வேறு பல வேலைகளையும் அவர் மிச்சமாக விட்டு வைக்கவில்லை. மலர் விட்டு மலர் தாவிக்குதித்து தேன் எங்கே கிடைக்கும் என்று தேடித் திரியும் தேனீயைப் போல அவர் சமுதாய வாழ்க்கையில் காணப்படும் வெவ்வேறு தொழில் துறைகள் ஒவ்வொன்றிலும் புகுந்து பார்த்து, எந்தத் துறையில் வல்லுநன் ஆனால் தன் வாழ்க்கைச் சக்கரத்தை வறுமைப் பள்ளத்திலிருந்து உயர்த்த முடியும் என்பதைக் கண்டு பிடிக்க எண்ணினார். ஆனால் அவர் எத்தனை துறைகளில் பழகிப் பார்த்த போதிலும் எதிலும் அவருக்குப் பிடிப்பு ஏற்படவில்லை. எப்படி ஏற்படும்? அவருடைய உள்ளத்தில் தான் ஓர் எழுத்தாளனாக விளங்க வேண்டும் என்னும் ஆசை வேரூன்றி விட்ட பிறகு வேறு தொழில்களில் நிலையாகத் தங்க முடியாமல் அவர் தத்தளிக்கத் தொடங்கியதில் வியப்பென்ன இருக்கிறது? மது, மங்கை, இந்த இரண்டினிடமும் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டவர்கள் அவற்றை மறந்து விட வேண்டும், என்று பிறர் உபதேசம் செய்தால் அதைக் கேட்டுத் திருந்தவா செய்கிறார்கள்? அதைப் போலவேதான் எழுத்தாளனாக விளங்கவேண்டும் என்னும் ஆசையும் ஒருவித பைத்தியம். அந்தப் பைத்தியத்திற்கு ஆளானவர்கள் பிறகு எளிதில் வேறுதிசை திரும்ப ஒப்பமாட்டார்கள்!

வறுமை, தாமஸ் பெயினைப் பார்த்து, "தம்பி, வீணாகக் கெட்டுப் போகாதே! எழுத்தாளனாக ஆக வேண்டும் என்று வெறுங் கனவு கண்டு வாழ்க்கையைப் பாலைவனமாக்கிக் கொள்ளாதே! உலகம் பரந்துகிடக்கிறது. போ! போய் ஏதேனும் தொழில் செய்! நல்லபடி பிழை! குடும்பத்தைக் காப்பாற்று! கெட்டு அலையாதே! பிறகு வருந்தி அழவேண்டிய நிலை பிறக்கும்" என்று உறுதியான குரலில் எச்சரிக்கை வாசகங்களை வீசிற்று.

ஆனால் அதே சமயத்தில், ஆர்வம், பெயினை அழைத்து, நண்பா! உன் முயற்சியைக் கைவிடாதே! நாலு பேர் போற்ற நல்லபடி வாழ்ந்து விடுவது பெரிதல்ல! வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசி வாணாளை வீணா

ளாக்கி மாண்டு மறைந்து விடுவது பெருமைக்குரிய ஒரு செயல் அல்ல! இம்சைக்கு ஆளானாலும் இலட்சியவாதியாக இருக்க வேண்டும். ஊரையும் உலகத்தையும் திருத்தும் உயர் பணியைப் புரிய வேண்டும்! எழுத்துக்கள் என்னும் வெடிகுண்டுகளை வீசி எதேச்சாதிகாரக் கோட்டைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கெல்லாம் சென்று பணியாற்றி அவற்றைத் தவிடு பொடியாக்க வேண்டும். இதைச் செய்ய வேண்டும் என்னும் ஆசை உன்னிடம் இருக்கிறது. சிறிது முயன்றால் இதற்கான திறமையும் வந்து விடும். ஏன் தயங்குகிறாய் இன்னமும்? எடு பேனாவை! தீட்டு எழுத்தோவியங்களை! குலுக்கு ஆணவக் கோட்டைகளை! பொடிப் பொடியாக்கு பொல்லாங்குக்காரர் சேட்டைகளை" என்று மெல்லிய குரலில் ஆனால் உள்ளத்தைத் தொட்டிழுக்கும் வசீகரமான முறையில கூறிற்று.

வறுமை, ஆர்வம், இரண்டிற்கு மிடையே பலமான போட்டி நடந்தது. பெயின் இவற்றின் நடுவிலே சிக்கிக் கொண்ட இருதலைக் கொள்ளி எறும்பானார். வறுமை பேசுவதைக் கேட்கும் போது அது சொல்வதுதான் நியாயம் என்று தோன்றும். ஆனால் ஆர்வம் மாயவலையை வீசும் போதோ வறுமை பேசுவது அவ்வளவும் வஞ்சகம் என்பது போலத் தெரியும்.

கடிகாரத்தின் பெண்டுலம் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிக்கும் அந்தக் கோடியிலிருந்து இந்தக் கோடிக்கும் ஊசலாடிக்கொண்டிருப்பதைப் போல, தாமஸ் பெயின், சில சமயம், வறுமையின் பக்கத்திலிருந்து ஆர்வத்தின் பக்கம் மாறுவதும், வேறு சில சமயம் ஆர்வத்தின் திசையிலிருந்து வறுமையின் திசைக்குத் திரும்புவதுமாக மாறி மாறிக் காட்சி அளித்து வந்தார். ஆனால், இறுதியில் வறுமையின் கட்சி தோற்றது. ஆர்வத்தின் வாதம்தான் வென்றது. பெயின் ஆர்வத்தின் பக்கம் சாய்ந்தார். ஓர் எழுத்தாளராக வாழ்க்கையை நடத்துவது என்னும் திண்ணமான முடிவுக்கு வந்தார்.

இங்கிலாந்திலே இருப்பதை விட அமெரிக்காவுக்குச் சென்றால்தான் இத் துறையில் சிறந்த பணியாற்ற முடியும் என்று எண்ணமிட்ட தாமஸ் பெயின், அமெரிக்காவிலிருந்த செல்வாக்குடையவரும் அதுபோது இங்கிலாந்தில் தங்கியிருந்தவருமாகிய **பெஞ்சமின் பிராங்க்லின்** அவர்களிடம் சென்று எப்படியோ ஒரு சிபார்சுக் கடிதம் வாங்கிக் கொண்டு அமெரிக்காவுக்குக் கப்பலேறினார்.

அமெரிக்காவில் வந்திறங்கிய சில நாட்களுக்கெல்லாம் பெயின் "பென்சில்வேனியா மாகசின்" என்னும் இதழின் ஆசிரியரானார். ஊதியம் மிகவும் குறைவுதான் என்றாலும் அது, இவரை உயிருடன் வைத்திருக்கப் போதுமானதாக இருந்தது. அந்த ஏடு அவருக்கு அளித்த ஊதியத்தைவிட உலகத்தைப் பற்றி அவருக்கு ஊட்டிய அனுபவ அறிவு அதிகம். உணர்ச்சி இழந்து, உற்சாகமிழந்து, வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து நடமாடும் பிணம் போல இதுவரை வாழ்ந்து வந்த தாமஸ் பெயின் இந்த இதழுக்கு ஆசிரியரானதும் எழுச்சியின் சின்னமானார். கிளர்ச்சியின் உருவமானார். புரட்சியின் தூதுவர் ஆனார். புத்துலகச் சிற்பியானார். அமெரிக்க மக்களின் அன்றைய வாழ்க்கையைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்து, அவர்களுடைய அடிமை வாழ்வு மிக விரைவில் அகல இருக்கிறது என்றும், பிரிட்டிஷ் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுபட்டு அமெரிக்கர்கள் விடுதலைக் குடியரசு அமைக்கும் நாள் அண்மையிலேயே இருக்கிறது என்றும் முன்கூட்டியே கணித்தறிந்து கூறிய தீர்க்கதரிசியானார்.

'பென்சில்வேனியா மாகசின்' ஆசிரியராக அமர்ந்து அவர் பணியாற்றியபோது அவருடைய இலட்சியங்களும் கொள்கைகளும் ஒரு திட்டமான வடிவமும் தெளிவும் அடைந்தன. அமெரிக்க நாட்டைவிட்டு ஆங்கில ஏகாதிபத்தியம் அகன்றாக வேண்டும் என்றும், ஒரு நாட்டு மக்களின் சுதந்திர வாழ்வைப் பறிக்கும் உரிமை உலகத்தில் எவருக்குமே கிடையாது என்றும், மக்களின் அடிமைத்தன்மை அழிந்து அவர்கள் வாழ்க்கையிலும் உரிமை ஒளி வீச வேண்டுமென்றும், நீக்ரோக்களைக் கொடுமைப்படுத்தும் அக்கிரமம் உடனே நிறுத்தப்பட்டாக வேண்டும் என்றும், பகுத்தறிவுக்கு ஒத்த முறையில் திருமணச் சடங்குகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் அந்த இதழில் இடைவிடாமல் எழுதிவரலானார்.

பெயின் அமெரிக்காவை அடைந்த அதே சமயத்தில் அந்த நாட்டில், எங்கு பார்த்தாலும் ஒரு வகையான முணுமுணுப்பும் பதைபதைப்பும் காணப்பட்டன. மக்களிடையே இரகசியப் பேச்சுகளும் விறுவிறுப்பான உரையாடல்களும் நிகழலாயின. சற்றுக் கூர்ந்து கவனிப்பவர்களின் கண்களுக்கு விரைவில் ஒரு போர் அந்த நாட்டில் மூண்டெழ இருக்கிறது என்பதற்கான அறிகுறிகளும் தென்படலாயின. பெயின் அமெரிக்காவில் வாழத் தொடங்கி சரியாக ஐந்து

மாதங்கள்கூட முடியவில்லை. அப்போது ஒருநாள் காலை, இந்த இரகசிய முணுமுணுப்புக்கள் திடீரென்று, வெளிப்படையாக போராட்டமாக மாறியது. மாசாசூசெட்ஸ் மாவட்டத்தில் உள்ள லெக்சிங்டன் என்னும் கிராமத்தில் அமெரிக்க உழவர் படைக்கும் பிரிட்டிஷ் இராணுவத்தினருக்கு மிடையே போர் தொடக்கமாயிற்று. விரைவில் போர் மேகங்கள் நாடெங்கும் பரவலாயின.

இந்த நேரத்தில்தான் தாமஸ் பெயின் '**சாமானிய அறிவு**' என்னும் பெயர் படைத்த ஓர் புத்தகத்தை எழுதலானார். அதை அவர் எழுதும் போது அது அச்சடிக்கப்பட்டு புத்தக வடிவமடைந்து பொது மக்களை எட்டிப் பார்க்கும் என்று அவர் கனவு கூடக் காணவில்லை. அதை அச்சடிக்க தைரியம் எந்த அச்சுக்கூட உரிமையாளருக்கும் இராது என்றே அவர் கருதினார். அப்படியே அது அச்சிடப்பட்டாலும் இருபது முப்பது பேர் கூட அதை விலை கொடுத்து வாங்கமாட்டார்கள் என்று உறுதியாக நம்பினார். அதிகம் போனால் ஒரு பத்துப் பன்னிரண்டு பேர் அந்தக் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்ப்பார்கள்—அதுவும் கூட தான் அநேகமாக அவர்களுக்குப் படித்துக் காட்ட வேண்டியிருக்கும் என்று எண்ணினார். அவருடைய மனம், "எழுது" என்று கட்டளையிட்டது—அவருக்கும் இதழாசிரியர் பணி புரிந்த நேரம் போக மிச்சமிருக்கும் நேரத்தை என் செய்வது என்று புரியவில்லை. எனவே பேனாவும் கையுமாக உட்காரலானார். அவர் புத்தகம் எழுதியதற்குக் காரணமே தன் மனதில் பொங்கி வழிந்து கொண்டிருக்கும் எண்ணங்களை வெளியே கொட்டி தன் உள்ளத்தைக் கொஞ்சம் 'காலி' செய்து கொள்ள வேண்டும் என்பதுதானே தவிர இந்த எழுத்துக்கள் ஓர் புத்தகமாகும்-புத்தகம் கடைவீதிக்கு வரும் – புத்தகம் விலையாகும்—பணம் தன் சட்டைப்பைக்கு வரும் என்ற நம்பிக்கை அல்ல. அந்த நம்பிக்கை அவருக்குத் துளியும் கிடையாது.

புத்தகம் எழுதி முடிக்கப்பட்டதும் பெயின், அதனை 'பென்சில் வேனியா மேகசின்' உரிமையாளரிடம் காட்டினார். அவர் அதனை வெளியிடமுடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். வேறோர் அச்சுக்கூட உரிமையாளர், துணிந்து எந்தப் புத்தகத்தையும் வெளியிடும் இயற்கைப் பண்பு படைத்தவர், அதனை அச்சிட்டு வெளியிட ஒப்புக் கொண்டார். ஆனால், தாமஸ் பெயினுக்கு ஒரு ஷில்லிங்கூட பணம் தரமுடியாது என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினார். எப்படியாவது புத்தகம்

வெளியானல் போதும் என்றெண்ணிய தாமஸ் இந்த நிபந்தனையை மறுபேச்சின்றி மிக மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார்.

புத்தக வெளியீட்டாளர் ஆயிரம் பிரதிகள்தான் வெளியிட்டார். அதில் ஐந்நூறு பிரதிகள் மட்டும்தான் விலையாகும் என்று அவர் எண்ணினர். அதுவுங்கூட தாமஸ் பெயினுக்கு ஜெப்பர்சன், வாஷிங்டன், பெஞ்சமின் பிராங்லின் போன்ற செல்வாக்குள்ள அமெரிக்கத் தலைவர்களிடையே நல்ல மதிப்பும் பழக்கமும் இருக்கும் காரணத்தால்தான் விற்கும் என்று கருதினர். போட்ட முதலாவது தேற வேண்டுமே என்ற எண்ணத்தின்மீது புத்தகத்திற்கு மிக உயர்ந்த விலை வைத்திருந்தார். சில புத்தகங்கள்தான் விற்கும்—அந்த வருமானத்தைக் கொண்டு எல்லாப் புத்தகங்களின் அச்சுக்கூலியையும் சரிக்கட்ட வேண்டும்— எனவே புத்தகத்திற்கு அதிக விலை வைப்பதே நஷ்டத்தைத் தடுப்பதற்கான வழி என்று அவர் கருதினர்.

ஆனல் என்ன ஆச்சரியம்! புத்தகம் வெளியான ஒரு வாரத்திற்குள் அச்சிடப்பட்ட ஆயிரம் பிரதிகளும் செலவாகி மேலும் ஓர் ஆயிரம் வெளியிடப்பட்டு அவையும் செலவாகி விட்டன. பிலடெல்பியா நகரத்திலிருந்து ஒரு புத்தக வியாபாரி 3000 பிரதிகளுக்கு 'ஆர்டர்' அனுப்பினர். நியூயார்க் நகரம் 1000 பிரதிகள் கேட்டது. உள்ளூர் வணிகர் ஒருவர் 1000 பிரதிகள் வாங்கிக் கொண்டார். சார்லஸ்டன் வட்டாரத்தில் மட்டும் 2000 படிகள் செலவழிந்தன. ஹார்ட்போர்ட் நகரத்தில் 700 படிகள் விற்றுப் போயின. சின்னஞ் சிறு கிராமங்களிலிருந்தெல்லாங்கூட 'ஆர்டர்கள்' வந்து குவியலாயின. ஒவ்வோர் ஊரும் நூறு இருநூறு என்று பிரதிகள் கேட்கலாயின. திருட்டுப் பதிப்புகள் பல வெளிவரலாயின. மாக்ரே-அந்தக் காலத்தில் அமெரிக்காவில் பெரும் புகழ் பெற்றிருந்த புத்தக வியாபாரி-ஒரே நாளில் 5000 படிகளுக்கு 'ஆர்டர்' கொடுத்ததோடல்லாமல் அவற்றை அச்சிடுவதற்குத் தேவையான தொகையையும் முன் பணமாகக் கொடுத்தான். ஐந்நூறு படிகள் விற்பதும் அருமை, நஷ்டம்தான் உருவாகும் என்று தான் எண்ணியதற்கு மாருக 'சாமானிய அறிவு' அமெரிக்காவிலேயே இதுவரை எந்தப் புத்தகமும் விற்றிராத அளவு விற்பனையாகும் அற்புதக் காட்சியைக் கண்டதும், புத்தகத்தை வெளியிட்டவர் இது என்ன விபரீதம் என்று அஞ்சி நடுங்கலானர். அமெரிக்காவில் அந்தக் காலத்தில் ஏதேனும் ஒரு புத்தகம்

2000 படிகள் விற்றுவிட்டால் அதனை மிக அதிகமான விற்பனை என்று அனைவரும் கருதுவது வழக்கம். ஆனால், தாமஸ் பெயின் தீட்டிய "சாமானிய அறிவோ" 5 லட்சம் படிகளுக்கு மேல் விற்கலாயின. இவ்வளவு ஏராளமான படிகள் செலவாகியும், பெயின், அதிலிருந்து கிடைத்த ஊதியத்தைத் தனக்கென்று எடுத்துக்கொண்டாரில்லை. அந்த வருமானம் முழுவதையும் அமெரிக்க விடுதலைப் போராட்டத்திற்கே நன்கொடையாக அளித்துவிட்டார்.

"சாமானிய அறிவு" அமெரிக்கா முழுவதும் காட்டுத்தீப்போல் பரவலாயிற்று எந்தத் திசையிற் பார்த்தாலும் எந்த ஊரில் பார்த்தாலும், எந்த இல்லத்தில் பார்த்தாலும் எவர் கையில் பார்த்தாலும் "சாமானிய அறிவு" தவழலாயிற்று. குருமார்கள் எல்லாம் "சாமானிய அறி"வைப் படிக்கலாயினர். உழவர்கள் எல்லாம் "சாமானிய அறிவை"ப் போற்றலாயினர். விடுதலை விரும்பிகள் எல்லாம் "சாமானிய அறி"வை வாசித்து வாசித்து மகிழலாயினர். பஞ்சாங்க ஏடுகளை விலை கூறிக்கொண்டிருந்தவர்கள் அவற்றை மூட்டை கட்டி வைத்துவிட்டு "சாமானிய அறிவை" விலை கூறலாயினர். காதலர்கள் தங்கள் காதலிகளுக்குக் கடிதம் எழுதும் போது 'சாமானிய அறி'வி லிருந்து பல வாசகங்களை மேற்கோள் காட்டலாயினர். பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு முடங்கல் தீட்டியபோது 'சாமானிய அறிவு' இப்படி இப்படிக் கூறுகிறது, என்று எடுத்துக் காட்டலாயினர். சேனைத் தலைவர்கள் தம் படைவீரர்களுக்கு 'சாமானிய அறிவைப் படித்துக் காட்டி வீர உணர்ச்சி ஊட்டலாயினர்.

'சாமானிய அறிவு' அதன் பெயரை விளக்கிக் காட்டுவதைப் போல மிகச் சாதாரண உண்மைகளைத் தான் எடுத்து விளக்கிற்று. அனைவருக்கும் தெரிந்த மிக எளிய பொருள்களைப் பற்றித்தான் பேசிற்று. அமெரிக்கர் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் என்ன எண்ணங்கள் தவழ்ந்து கொண்டிருந்தனவோ அவற்றைத்தான் அது எடுத்து மொழிந்திருந்தது. ஆனால் அதனுடைய நடை ஆவேசம் மிக்கதாய் இருந்தது. ஜீவசக்தி நிறைந்ததாய் இருந்தது. துள்ளிப் பாயும் சொற்களும் மின்சார வேகத்தில் மனதைத் தாக்கும் எண்ணங்களும் கொண்டதாய் இருந்தது. அதுமட்டுமல்ல, கடைக்காரர்களும் உழவர்களும் வீதி கூட்டுபவர்களும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய நடையில் அமைந்திருந்தது. எனவேதான் அது ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளக்கூடிய எளிய நடையில் அமைந்திருந்

தது. எனவேதான் அது ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் நேரே சென்று தங்கிற்று.

"சாமானிய அறிவு" விடுதலைத் தீயை மூட்டிற்று. அந்தத் தீ ஊரெங்கும் நாடெங்கும் பற்றி எரியலாயிற்று. சுதந்தர ஆர்வம் ஒவ்வொரு அமெரிக்க மனிதரையும் ஆட்டிப் படைக்கலாயிற்று. விடுதலை விடுதலை விடுதலை என்று ஒவ்வொருவரும் ஓங்கி முழங்கத் தொடங்கினர். ஆங்கிலேய ஆட்சி ஏன் அகன்றாக வேண்டும் என்பதில் கொஞ்சநஞ்சம் ஐயம் கொண்டிருந்தவர்களுக்கும் இந்தப் புத்தகம் தெளிவான விளக்கம் அளித்து அவர்களின் ஐயத்தை வேரோடு கல்லியெறிந்தது. வாஷிங்டன் தலைமையில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி வந்த படை வீரர்கள் பலர் தைரியம் தளர்ந்து,உறுதி குலைந்து,மனம் சோர்ந்துகிடந்தனர். இந்த நூல் வெளியானதும் அவர்களுடைய அச்சம் அகன்றது; சோர்வு தீர்ந்தது. தைரியம் பிறந்தது. பெற்றால் தனி நாடு;இல்லையேல் இடுகாடு என்று அண்டம் அதிர முழங்கலாயினர். "இங்கிலாந்திலே மன்னன் ஒருவன் இருக்கிறான். போர் புரிவதையும், தன் மனம் போல நடப்பவர்களுக்குப் பட்டம் பதவிகள் வழங்குவதையும் தவிர அவனுக்கு வேறு வேலையே கிடையாது. சுருக்கமாகச் சொல்கிறேன் தன் நாட்டைஓட்டாண்டிகளின் கூடாரமாகஆக்குவது தான் அவன் ஆற்றிவரும் அரும்பெரும் பணி. இந்தச் செயற்கரிய செயலைச் செய்து வருவதற்காகத் தான் அவனுக்கு ஆண்டுதோறும் 8, 00000, பவுன்கள். நன்கொடை அளிக்கப்பட்டு வருகின்றன. நான் கூறுகிறேன், மணிமுடிதாங்கிய இந்த மதோன்மத்தர்கள் அனைவரையும் விட நேர்மை உள்ளம் படைத்த ஒரே மனிதன் இருந்தாலும் போதும் அவனால் தான் சமுதாயம் முன்னேறும்" என்பதாக "சாமானிய அறி"வில் காணப்படும் ஒரு பகுதியை யைத் திருப்பித் திருப்பி ஒப்பிக்கலாயினர் அமெரிக்க மக்கள். எங்கிருந்தோ வந்தான்— தாமஸ் பெயின்— எம் இதயத்தில் இடம் பெற்றான் என்று மீண்டும் மீண்டும் கூறலானார்கள் அமெரிக்க வாலிபர்கள்.

அமெரிக்க சுதந்திர சாசனத்தைத் தயாரித்துக் கொண்டிருந்த அறிஞர் ஜெப்பர்சன் தாமஸ் பெயினிடம் வந்து அவரை மிகவும் பாராட்டி விட்டுப் போனார். தத்துவ ஞானி பெஞ்சமின் ப்ராங்க்லின், "இந்தப் புத்தகம் இவ்வளவு ஏராளமாக விற்பதில் வியப்பென்ன இருக்கிறது? மக்களின் கேள்விகளுக்கெல்லாம் இதில் விடை இருக்கிறதே விற்காமல் எப்படி இருக்கும்? என்று மனம் மகிழ்ந்து கூறலானார்.

'சாமானிய அறிவு' வெளியாகி அமெரிக்காவில் பெருத்த தோர் எழுச்சியை உண்டு பண்ணிய ஆறுவது மாதம் 'பிலடெல்பியா' நகரத்தில் அமெரிக்க சுதந்திர சாசனம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதில், "சாமானிய அறி" விலிருந்து பல வாசகங்கள் எடுத்து கையாளப் பட்டிருந்தன. அமெரிக்கக் குடியரசுக்கு அதில் சூட்டப் பட்டிருந்த பெயராகிய "அமெரிக்க ஐக்கிய நாடுகள்" The united states af America என்னும் சொற்றொடரே கூட தாமஸ் பெயின் உருவாக்கியதுதான்.

சுதந்தர சாசனம் வெளியிடப்பட்டதே தவிர முழு சுதந்தரம் இன்னமும் அமெரிக்காவுக்குக் கிடைக்கவில்லை. விடுதலைப் போர் முடியவில்லை. 'சாமானிய அறிவை, எழுதி முடித்ததும், பெயின் அளவற்ற உற்சாகம் கொண்டு, பேனவை மூடி சட்டைப் பையில் போட்டு விட்டு, நேரிடையாகப் போராட்டத் தீயில் குதித்து விட்டார்; அவரும் ஒரு படை வீரரானர். அவர் போர் வீரராக இருந்தபோது ஒரு முறை அவர் காதருகே ரீங்கார மிட்டுச் சென்றது ஆங்கிலேயரின் துப்பாக்கிக் குண்டு ஒன்று. மற்ருேர் முறை அவருடைய வேட்டியைத் துளைத்துக் கொண்டு சென்றது. இன்னேர் முறை அவர் ஒரு வீட்டின் மேல் தளத்தில் தங்கியிருந்த போது அடித்தளத்தின் மீது பல குண்டுகள் பாய்ந்தன. இவ்வண்ணம் பல முறை ஆபத்து அவரை அணுக்க வந்தது. என்றாலும் அச்சம் சிறிதும் இன்றி பட்டாளத்தில் போர் வீரராக இருந்து அரும்பணி ஆற்றி வந்தார்,

திடீரென்று ஒரு நாள் அமெரிக்க விடுதலைப்படை நியூயார்க் நகரில் பெருந்தோல்வி அடைந்து தப்பினேம் பிழைத்தோம் என்று நாலா பக்கமும் சிதறியோடத் தொடங்கின. நியூயார்க் தோல்வி நாடெங்குமிருந்த படைகளுக்குச் சோர்வையும் சோகத்தையும் சொல்லொணுத் துக்கத்தையுமே அளித்தது. வெற்றி, வெற்றி வெற்றி என்று ஆநந்த கீதம் பாடின ஆங்கிலேயப் படைகள். ஆனல் அதே நேரத்தில் அமெரிக்க விடுதலைப் பட்டாளம்,தோல்வி தோல்வி தோல்வி என்று பெருமூச்சுடன் புகலலாயிற்று. தளபதி வாஷிங்டன் மனம் உடைந்து போனர். பொது மக்கள் உள்ளமும் வெற்றியாவது இனிக்கிடைப்பதாவது என்று சலிப்புச் சிந்து வாசிக்கலாயிற்று. அமெரிக்காவின் எதிர்காலமே இருண்டு விட்டது என்று அனைவரும் கருதலாயினர்.

தாமஸ் பெயின் தங்கியிருந்த இடத்திற்கு ஓடோடி

வந்தார் தளபதி வாஷிங்டன். அவருடைய ஆவேசமுள்ள எழுத்துக்களால் தான் அமெரிக்கப் படைகளுக்குப் புதிய உற்சாகமும் தைரியமும் ஊட்ட முடியும் என்று அவர் கருதினார். ஆழங்காண முடியாத படுபாதாளத்தில் வீழ்ந்து போயிருக்கும் அமெரிக்காவை ஓரே விநாடியில் உயரத் தூக்கி நிறுத்தி வெற்றிப் பாதையில் வீரநடை நடக்கும்படிச் செய்ய வல்ல ஆற்றல் தாமஸ் பெயினின் பேனாமுனைக்குத் தான் உண்டு என்று அவர் திண்ணமாக நம்பினார்.

பெயினிடம் வந்தார். அருமைத் தோழா என்று ஆர்வமுடன் அழைத்துக் கைக் குலுக்கினார். "நான் உன்னைத் தோழா என்றழைக்கப் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். உன்னை முற்றிலும் நம்புகிறேன்." என்று அளவற்ற மகிழ்ச்சியுடன் பேசினார். 'நண்பா, சோபிதமிழந்து சோர்வுமடைந்து கிடக்கும் இந்த படைவீரர்களை மட்டுமல்ல அமெரிக்க மக்கள் அத்தனைபேரையுமே அஞ்சா நெஞ்சர்களாக ஆக்க நீ ஏதாவது எழுதியாக வேண்டும்" என்று அன்பு ததும்பக் கெஞ்சினார்.

பெயின் சில விநாடிகள் தான் சிந்தனை செய்தார். உடனே, அவர் தங்கியிருந்த அந்தப் பாசறையிலேயே தன்னிடமிருந்த போர்ப்பாறையையே, 'மேஜை'யாக தன் முழங்கால்கள் மீது வைத்துக் கொண்டு' பறைக்குச் சூடேற்ற அங்கு எரிந்து கொண்டிருந்த தீயின் ஒளியையே வெளிச்சமாகக் கொண்டு மட மட வென்று எழுதத் தொடங்கினார். அவர் எழுதிக் கொண்டிருக்கையிலேயே அந்தப் பாறையில் 'முகாம் போட்டிருந்த போர் வீரர்களெல்லாம் ஓடோடி வந்து அதை உரத்த குரலில் படிக்கலாயினர். படிக்கும் போதே அவர்களுடைய கண்களில் தீப்பொறி பறந்தது. உதடுகள் துடித்தன. உள்ளம் குமுறிற்று. குருதி உடலில் விரைந்து ஓடிற்று. அடைந்தே தீருவோம். அமெரிக்கக் குடியரசு என்று தம்மை மறந்து கூவினர். விடுதலை ஆவேசத்தால் உந்தப்பட்டு துள்ளிக் குதித்து மகிழ்ந்தனர். இனி ஆபத்துக்கள் ஓராயிரம் வரினும் கவலையில்லை உயிர் எம்மை விட்டுப் போயினும் அச்சமில்லை—போர்க்களம் புகுந்தே தீருவோம், வெற்றிப் பாதையில் நடந்தே தீருவோம் என்று ஆர்ப்பாட்டக் குரல் எழுப்பினர்.

நெருக்கடி 1, நெருக்கடி 2, நெருக்கடி 3 என்பது போலத் தலைப்பிட்டுக்கொண்டு, தாமஸ் பெயின் அன்றன்றுட இராணுவ நிலைமையைக் கவனித்து, அந்தந்த நிலைமைக் கேற்ற

(28-ம் பக்கம் பார்க்க)

கிராமக் கல்வியும் அதன் சீர்கேடும்

கே. நாராயணசாமி பிள்ளை (P. தருமதுப்பட்டி)

நம்தேசம் அதிகமாகக் குக்கிருமங்கள் நிறைந்தது. அதிக ஜனங்கள் கிருமங்களிலேயே வசிக்கிருர்கள். அவர்கள் எல்லோரும் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டவர்கள். விவசாயம் மிகவும் கஷ்டமான தொழில். அதில் ஓய்வு கிடையாமல் உழைக்க வேண்டியவர்கள். ஆகையால் அவர்கள் வெளிநாடுகளில், அடுத்துள்ள பெரிய பட்டணங்களில் என்ன நடைபெருகின்றது, கவர்ன்மெண்டார் பொது ஜனசௌகரியங்களுக்கு என்ன ஏற்பாடுகள் செய்து வருகிருர்கள், நாம் உலகத்தோடு ஒத்து வாழ முக்கியமாய் வேண்டியது எது? என்பதையும் அறியார்கள். எல்லா வற்றிலும் முக்கியமானது கல்வி என்பதையும் அறியார்கள். இதனுல் தான் காலஞ் சென்ற நம் நாட்டுக் கவியரசர் பாரதியார் அவர்களும் மகான் காந்தியடியவர்களும் கிராமங்கள் சீர்படாமல் நம் தேசம் சீர்படாது, கிராமக் கல்வி முன்னேற்றமடையாமல் நம் தேசம் கல்வித் துறையில் முன்னேற்றமடையாது என்று எடுத்துக் காட்டி வந்துள்ளார்கள். அதன் காரணத்தால் தான் நம் சுதேசக் கவர்ன்மெண்டார் ஆட்சிக்கு வந்ததும் சுமார் 500 ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமங்களிலும் அவசியம் ஒரு ஆரம்பப் பாடசாலை இருக்க வேண்டும் என்ற திட்டம் வகுத்துள்ளார்கள். அவர்கள் வகுத்துள்ள திட்டம் வகுத்துக் கொண்டு வரும் திட்டம்சில படிப்பாளிகள் அறிவார்களே யொழிய கிராமவாசிகளான குடியானவர்கள் அறியார்கள். கிராமக் கல்வி தான் மிக மிக அவசியம் என்று சர்க்காரும், கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களும் சொல்லிக்

(27-ம் பக்க தொடர்ச்சி)

வண்ணம் வரிசை வரிசையாக 16 இதழ்கள் வெளியிட்டனர். இந்த "நெருக்கடி இதழ்கள்" நாடெங்கும் பரவி, படை வீரர்கட்கெல்லாம் உற்சாகமூட்டி, பொதுமக்கட் கெல்லாம் புத்துணர்வை அளித்து, அமெரிக்க நாட்டையே ஓர் ஆவேசப் புயலாக மாற்றி அமைத்தது. அந்தப் புயலில் சிக்குண்டு ஆங்கில ஏகாதிபத்தியக் கப்பல் தூள் தூளாய்ச் சிதறுண்டு போயிற்று. அமெரிக்கா விடுதலை பெற்றது. வெற்றி விழா நாடெங்கும் கொண்டாடப் பட்டது. போர்வாள் தளர்ச்சியடைந்தாலும் பேனு முனை தளராது என்னும் உண்மையைப் பெயின் "நெருக்கடி இதழ்கள்" மூலம் நிலைநாட்டினுர்.

கொள்வார்களே தவிர, கிராமங்களிலுள்ள குடியானவர்கள் அறியார்கள்.

உதாரணமாக:—கட்டுரை எழுதிய நான் இதுவரை கிராமங்களிலேயே அதிலும் சர்க்கார் திரவ்விய சகாயம் பெரும் பாடசாலைகளிலேயே சுமார் இருபது ஆண்டுகள் ஆசிரியனாகவும், மானேஜராகவும் தொண்டாற்றி வந்துள்ளேன். இப்பொழுதும் ஆசிரியனாகவும் மானேஜராகவும் தொண்டாற்றி வருகிறேன். நான் பாடசாலை வைத்து நடத்தும் இக்குக் கிராமம், சுமார் 500 ஜனத்தொகை கொண்ட சிறு பட்டிக் காடு. இதைப்போல் அநாரீகம்கொண்டபட்டிக்காடு வேறு எங்கும் இருக்கவே இருக்காது என்றே நிச்சயமாகச் சொல்லுவேன். ஏனென்றால் கடைகள் கிடையாது, வியாபாரம் செய்யப் போக்கு வரத்து வசதி கிடையாது. இக்கிராமத்தைச் சுற்றிலும் சுமார் 5 மைலுக்குள் வேறு பெரிய பட்டணமோ, அல்லது பெரிய கிராமமோ கிடையாது. சரியான பாதுகாப்பு இல்லாமல் மக்கள் கூட வர முடியாது. நிலவளம், நீர்வளமற்ற கற்பாறைகள் நிறைந்த புஞ்சைக் காடுகளைக் கொண்டது. பொது ஜனங்களில் முக்கால் பங்கிற்குமேல் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். சுருங்கச் சொன்னால்கடவுளால் கைவிடப்பட்ட கண்ணிய மற்ற காடு என்றே சொல்லலாம். இப்படிப்பட்ட கிராமத்தில் ஆசிரியர்கள் படும் அல்லல்களுக்கு அளவே கிடையாது. குடியிருக்க வசதியான வீடுகள் கிடையாது. உணவுப் பொருள்கள் விஷயமாய்ச் சொன்னால் விஷயம் பெருகும். ஆகையால் உணவு விஷயத்தை நிறுத்திக்கொண்டேன். பாடசாலைக்கு வராத பிள்ளைகளை ஆசிரியர்கள் வீடு வீடாகக் கூப்பிடப் போனால் பெற்றோர்கள் என்ன சொல்லுகிறார்கள், "ஏனைய்யா வாத்தியாரே உன் பிழைப்புச் சரியாய் நடக்கத்தானே, சம்பளம் குறையாமல் வாங்கத்தானே எங்கப் பிள்ளைகளை கூப்பிடுறங்க எங்க பிழைப்பு எப்படி போரது? என்று, அதையும் ஆசிரியர்கள் அங்கீகரித்துக் கொண்டு எனக்காகவாவது பையனை அனுப்புங்கள், அவன் படித்துக் கண்ணுள்ளவனாகட்டும் என்றால், உடனே பெற்றோர்கள் "ஏனைய்யா எங்க பிள்ளைகள் குருடர்களாகவா யிருக்கிறார்கள்; நீ கூட்டிக் கொண்டு போய் கண் தெரிய வைக்கப் போரே, போங்கய்யா போங்க நல்ல வாத்தியாரு என்று ஏளனம் செய்கிறார்கள். மற்றொருவர் அக்கிராமத்தில் பெரிய செல்வாக்குள்ளவர். போதுமான சௌகரியங்களை யுடையவர். அவருக்கு ஒரே பையன் சுமார் வயது 8 இருக்கும், படிப்பு வாசனையே அற்ற

ஞர். ஆசிரியர் அவருடைய பையனைக் கூப்பிடப்போன சமயம் அந்த தனவந்தர் என்ன சொல்லுகிறூர்.

விருத்தம்

பிள்ளையும் படிக்க வேண்டாம்
பிரம்படியும் படவும் வேண்டாம்
சள்ளையாம் சுவடு தூக்கிச்
சங்கடப் படவும் வேண்டாம்
பெற்றவள் மனங்களிக்கப் பிள்ளை
என்றிருந்தால் போதுமையா

இம்மாதிரியான கிராமங்களிலுள்ள பாடசாலைகளுக்குக் கல்வி அதிகாரிகள் பார்வையிடும் காலத்திலோ பரீக்ஷிக்கும் காலத்திலோ ஆஜர் இருப்பிடமில்லை, தேர்ச்சி நன்ருய் இல்லை, பாடசாலை முன்னேற்ற மடைய வழியில்லை ஆகையால் தற்போதுள்ள ஆசிரியர்களில் ஒருவர் வேண்டியதில்லை. கிராண்டு முழுதும் கொடுக்கச் சிபார்சு செய்யப்படமாட்டாது. (Inefficient School) திறமையற்ற ஸ்கூல் என்று ரிமார்க் எழுதிவிடுகிருர்கள். இதனுல் எய்டெட் பாடசாலையாக இருந்தால் வேலை செய்த காலங்களுக்குச் சரியாய் ஊதியம் கிடைக்காமல் மானேஜர் மனம் நொந்து போய் ஒரு ஆசிரியரையும் குறைத்துக்கொள்கிறூர். அடுத்த வருஷமும் இதே கதிதான். இன்னும் ஒரு ஆசிரியரைக் குறைத்துக கொள்கிறூர். இப்படியே குறைந்து குறைந்து முடிவில் பாடசாலையை மூடிவிடும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இது எப்படி இருக்கிறதென்றுல் யானையாக இருந்தது ஆடாகி, கோழியாகி, அரைக்கீரைத் தண்டானது போல் இருக்கின்றது. ஜில்லா போர்டு பாடசாலை தேவையில்லை என்று எடுத்துவிடுவார்கள். இப்படியே பாடசாலை வைப்பதும் எடுத்துவிடுவதும் மூடி விடுவதுமாக இருந்தால் கிராமக் கல்வி எங்ஙனம் முன்னேற்ற மடையும். இதிலிருந்து கிராமக் கல்வி கெடுவதும் வளர்வதும் யாரால் என்பது நன்கு தெரிகிறது. எப்படியென்றுல் கிராமவாசிகளான விவசாயிகள் கல்வியைக் கவனியாது புறக்கணிப்பதுதான் என்பது நன்கு விளங்குகிறது.

இவ்வாறு கிராமங்களில் நடக்க யாதொருவிதமான பொருப்பும் இல்லாமல் ஆசிரியர்களை பிள்ளைகளின் ஆஜர் குறைவு, தேர்ச்சி, பாடசாலையின் முன்னேற்றம் சரியாய் இல்லை என்று கல்வி அதிகாரிகள் கோபம் செய்துகொள்ளுகிருர்கள். இது எது போல இருக்கிறதென்றுல் அஞ்சு வகையும் உண்டானுல் அறியாப் பெண்ணும் கறி சமைப்பாள், என்பது ஒரு பழமொழி. சமையலுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் குறை

யில்லாமல் இருந்தால் தெரியாத பெண்ணுங்கூட உருசிகரமான கறி சமைப்பாள். ஒரு குடும்பத்திலுள்ளவர் தன் மனைவிக்கு வேண்டிய பதார்த்தங்கள், சாமான்கள் ஒன்றும் வாங்கிக்கொடாமல் சுற்றிக் கொண்டே வருவார் அவருடைய மனைவி நல்ல புத்தியுள்ளவள்தான், நாயகருக்குப் பயந்து எப்படியாவது கூலிக்குப் போயாவது சமையலுக்கு வேண்டிய சில பொருள்களை வாங்கிதன்னால் முடிந்ததைச் செய்து வைத்திருப்பாள். சுற்றித்திரிந்த கணவர் சாப்பாட்டிற்கு வந்ததும், சாப்பாட்டில் உட்கார்ந்ததும் குழம்பு சரியில்லை, ரசம் கடுத்துப்போய் விட்டது, பருப்பு சரியாய் வேகவில்லை, பொரியலில் உப்புக் கூடிப் போய் விட்டது என்று சொல்லி மனைவியைக் கோபித்துச் சண்டை போட்டுத் தண்டிப்பார். இம்மாதிரி தான் கிராமப் பாடசாலையிலுள்ள ஆசிரியர்களைக் குறைகூறுவதாயிருக்கிறது. சுவரைவைத்துச் சித்திரம் எழுத வேண்டும் என்றாற் போல, பாடசாலைக்குப் பிள்ளைகள் வந்தால் தானே தேர்ச்சி, ஆஜார், முன்னேற்றம் காட்ட முடியும். பிள்ளைகள் வராமல் போனால் ஆசிரியர்கள் கூப்பிடுவார்கள். பெற்றோர்கள் முன் சொன்னது போல் ஆசிரியரை ஏளனம் செய்தால் ஆசிரியர் என்ன செய்வார். இது விஷயமாய் சில கல்வி அதிகாரிகள் ஆசிரியர்கள் பெற்றோரின் ஒத்துழைப்பை நாட வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

பெற்றோரின் ஒத்துழைப்பு என்றால் என்ன? ஆசிரியர்கள் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும், கிராமவாசிகளின் நோக்கம் ஆசிரியர்களின் பிழைப்பு சரியாய் நடக்கச் சம்பளம் குறையாமல் வாங்கத்தான் இவ்வளவு பாடும் படுகிறார் என்று மட்டும் ஒரே பிடிவாதமாய்ச் சொல்லுவார்களேயொழிய, தங்களுடைய குழந்தைகளின் படிப்புக்காகத் தான் என்று ஒருக்காலும் கருதமாட்டார்கள். இது என்னுடைய அனுபவத்தில் கண்டது. இம்மாதிரியான மூட நம்பிக்கை கொண்டவர்களை, ஆசிரியர்கள் எப்படி திருப்ப முடியும். ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பை அவர்கள் நாடி நடப்பார்களா? நடக்கவே மாட்டார்கள்.

பிள்ளைகள் சரியாய்த் தவறாமல் வரும் கிராமப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் தேர்ச்சி காட்டவில்லையா? பாடசாலை முன்னேற்றமடைய வேலை செய்யவில்லையா? பிள்ளைகளின் ஆஜர் குறையாமல் இருந்தால் ஆசிரியர்கள் வேலை செய்யாமல் இருப்பார்களா? பிள்ளைகள் இல்லாமல் தேர்ச்சியும், முன்னேற்றமும் காட்ட முடியாது. பிள்ளைகள் சரியாய் வராத பாடசாலைகளிலுள்ள ஆசிரியரைக் குறை கூறுவது முன்சொன்ன

குடும்பத்தைக் கவனியாது சுற்றித்திருந்த கணவர் தன் மனைவியை குறைவது போன்றதாகும்.

கிராமக் கல்வி முன்னேற்றமடைய வேண்டுமானால், குடியானவர்கள் கல்வி அவசியம் என்பதை உணர வேண்டும்' ஆசிரியரைத் தேட வேண்டும். அல்லது சர்க்கார் அவர்களைக் கட்டுப் படுத்தி படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இது இரண்டைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். தற்போது உள்ள நிலைமையில் காட்டாயக் கல்வி ஏற்படுத்தி இபலாது குடியானவர்கள் கல்வி அவசியம் என்பதை எத்தனை சதுர்யுகம் வந்தாலும் உணர மாட்டார்கள்.

என்னுடைய சின்ன அறிவுக்கு எட்டியயோசனை என்னவென்றல், தற்போது எந்தெந்தக் கிராமங்களில் எத்தகைய பாடசாலைகள் உள்ளதோ அவைகள் மூடாமல், எடுபடாமல் கிராமக் கல்வி முன்னேற்றமடைய வேண்டுமானல், ஆஜர் குறையுள்ள பாடசாலைகளின் தலைம ஆசிரியர் மூலமாவது அல்லது மானேஜர் மூலமாவது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாதபெற்ருேர் பெயர், மாணவன், மாணவி, பெயர் அனுப்பப் படாத காலம் இவைகளைக் குறித்து ஒரு ரிப்போர்ட் கல்வி இலாகா டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். கல்வி இலகா அத் தரிப் போர்ட்டை சிபார்சு செய்து அந்தந்தக் கிராமத்தைச் சேர்ந்த போலீஸ் அதிகளுக்குக் அனுப்பி பிள்ளைகளை அனுப்பாத பெற்ருேர்களை விசாரணை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமவாசிகள் ஆசிரியர்களைத் தான் அலட்சியமாய் நினைப்பார்களேயொழிய போலீஸ் அதிகாரிகளை அலட்சியம் செய்ய மாட்டார்கள். இம்முறை நாம் கண் கண்ட காகூியாகும்.

எது என்ருல்:—சென்ற 40 ஆண்டுகளுக்கு முன் மதுரை ஜில்லாவிலுள்ள பிரமலைக் கள்ளர்கள் என்ற ஜாதியார் எப்படியிருந்தார்கள்? நாகரீகம் என்பது என்ன என்று தெரிந்திருந்தார்களா? படிப்பு என்ருல் பெரிய கசப்பாய் நினைப்பார்கள். அவர்களுடைய செய்கைகளை வெறுக்காதவர்கள் உண்டா? அப்படிப்பட்டவர்கள் தற்போது கல்வித்துறையிலும் நாகரீகத்திலும் எவ்வளவு முன்னேற்ற மடைந்துள்ளார்கள். ஆணும் பெண்ணும் கல்வியில் போட்டி போட்டுப் படித்தேறி பற்பல உத்தியோகங்களுக்கு வருகிருர்கள். அப்படி அவர்கள் அடைந்து முன்னேற்றத்திற்குத் தனியாய்க் கள்ளர்ரெக்களமேஷன் என்ற திட்டம் சர்க்கார் வகுத்த தேயாகும். முக்கியமாய் போலீஸ் தான் அவர்கள் கல்வியால் முன்னேற்

றமடைய முக்கிய காரணமாய் உழைத்தார்கள். ஆனால் நான் அப்படியொன்றும் தனியான ஏற்பாடுகள் செய்யவோ, தனியாக பணம் ஒதுக்கி வைக்கவோ, தனி உத்தியோகஸ்தர்கள் நியமனம் செய்யவோ, தனிக் காரியாலயம் ஏற்படுத்தவோ சொல்லவில்லை. பாடசாலை இல்லாத கிராமங்களில் பாடசாலை ஏற்படுத்தவும் சொல்லவில்லை. அந்நிய நாடுகளில் 100க்கு 90 பேர்கள் எழுதப் படிக்கத் தெரிந்திருக்கிறார்கள். சில நாடுகளில் 100க்கு 100 பேர்கள் எழுதப்படிக்கத் தெரிந்திருக்கிறார்கள். நம் நாடு கல்வியில் மிகவும் பிற்போக்கில் இருக்கிறது; சொல்ல வெட்கமாயிருக்கிறது, 100க்கு 15 போர்கள் கூட சரியாய் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாய் இருக்கிறார்கள். அதிலும் கிராமங்கள் கல்வி வாசனையே அற்றுப் போய்க் கிடக்கிறது. கிராமங்களை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று மேடைகளில் சில மேதாவிகள் வாய்ப் பேச்சில் பேசுகிறார்கள். வாயால் பேசினால் கிராமக் கல்வி வளர்ச்சி அடையாது. கிராமக் கல்வி முன்னேற்றமடைய வேண்டிய திட்டங்கள் என்று ஏட்டில் எழுதி வைத்தாலும் கிராமக் கல்வி வளர்ச்சி அடையாது. நான் சொன்னபடி போலீஸ் மூலம் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பாத பெற்றோர்களை போலீஸ் ஸ்டேஷனில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி முதல் வரை ஆஜராயிருக்கும் படி செய்தால் போதும். எவ்வளவு சீக்கிரம் கிராமக் கல்வி முன்னேற்றமடைகிறது பாருங்கள். இதனால் சர்க்காருக்கு எந்த விதமான செலவும் கிடையாது. ஆனால் போலீஸுக்கு அதிகமான அலுவல்கள் ஏற்படலாம். அதன் காரணமாக ஒவ்வொருமாதமும் விசாரணை நடத்த முடியாமல் போனாலும் போகலாம். அதனால் முடியாது என்றும், வேலையோடு வேலையாய் இது ஒரு வேலையா என்று போலீஸ் கஷ்டப்படலாம், நம் நாட்டிற்காக உழைக்கும் உத்தமர்கள் அவ்வாறு சொல்லமாட்டார்கள். போலீஸுக்குப் பயந்து கிராம வாசிகள் அவர்களுடைய குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிக்கல்வி கற்க வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டு விட்டால் அதனால் உண்டாகும் புகழும்,கீர்த்தியும் போலீஸுக்கே உரித்ததாகும். ஒவ்வொரு மாதமும் நேரடியாகப் போலீஸ் விசாரணை நடத்த வேண்டிய ஏற்பாடுகள் கல்வி இலாகாவும், போலீஸ் இலாகாவும் சேர்ந்து திட்டம் வகுத்துக் கொண்டால் மிகவும் பாராட்டத் தகுந்த விஷயமுமாகும். இவ்விஷயம் பொருத்தமானதா என்பதை பரீக்ஷித்துப் பார்த்துக் கை கூடவில்லையானால் விட்டு விடலாம். அப்படியில்லாமல் இவ்விஷயம்

சாத்தியமான தல்ல என்று விட்டு விட்டால் சிராமக்கல்வி எப்படியானல் நமக்கென்ன என்று நினைப்பார்களே யானல் நம் தேசத் தந்தையார் காந்தியடிகளின் நிர்மாணத்திட்டத்திற்கு முரண் பட்ட தாகும் என்பதை கல்வியின் ஆட்சியாளர்கள் தெரிந்து கொள்ளவும்.

கல்வி அவசியம் என்பதைப் பாரதியார் கீழ் கண்ட பாவின் மூலம் விளக்குகிருர்.

விடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியிலாத தொருரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கும் அமுதமென அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.

தருமங்கள் எல்லாவற்றிலும் கல்வியைப் பரப்புவதே உயர்ந்ததும் மேலானதும் என்பதை பாரதியார் விளக்குகிருர்.

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்
அன்னச் சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினுயிர நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்

கல்வியைப் பரப்பும் வகையை விளக்குகிருர்.

நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச் சொலருளீர்
ஆண்மையான ருழைப்பினை நல்கீர்
மதுரத்தே மொழிமாதர்க ளெல்லாம்
வாணிபூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர்.

(தொடர்ச்சி 36—ம் பக்கம் பார்க்க)

இராமநாதபுரம் மாவட்ட
ஆரம்ப ஆசிரியர்கள் ஆசிரியைகள் மாநாடு

காரியாலயம்:- திருப்புத்தூர்.

ஆசிரியர்களுக்கு அறிவிப்பு.

அன்புடையீர்!

16—7—50உ ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு செட்டிநாடு பாடசாலையில் ஷை மாநாட்டு காரியக்கமிட்டிக் கூட்டம் கண்டனூர் C. A.M. ஸ்கூல் தலைமையாசிரியர் திரு சுப்பையர் அவர்கள் தலைமையில் கூடி கீழ் கூறிப்பிட்டுள்ள விஷயங்கள் முடிவு செய்யப்பட்டன. ஷை கூட்டத்திற்கு தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியர்கள் பேரவைக் காரியதரிசி உயர்திரு S. வில்லியம்ராஜ் அவர்களும், ஏனைய தாலுக்கா பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

1. 16—7—50உ வரை காரியதரிசியாரால் சமர்பிக்கப்பட்ட வரவு செலவு கணக்குகள் பரிசிலனை செய்து அங்கிகரிக்கப்பட்டது.

2. ஜில்லா மாநாட்டை 16–9–50, 17–9-50 தேதிகளில் காரைக்குடியில் நடத்துவதென்றும்,

3. ஷை மாநாட்டிற்கு ஆரம்ப ஆசிரியர்கள் பால் அன்பும் அநுதாபமும் கொண்டுள்ள பெரியோர்களை அழைப்பதென்றும்,

4. ஷை மாநாட்டை ஏனைய மாவட்டங்களுக்கு வழிகாட்டியாகவும் சிறந்த முறையிலும் நடத்துவதற்கு வேண்டிய ஒத்துழைப்பு அளிக்கும் படியாக ஜில்லாவிலுள்ள ஆசிரியர்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டும்,

5. ஆரம்ப ஆசிரியர் சங்கக் காரியதரிசிகள் அனைவரும் தங்கள் சங்கத்து மெம்பர்களிடமிருந்து சந்தா முதலியவற்றை வசூலித்து 30-8-50 தேதிக்குள் மாநாட்டு காரியதரிசிக்கு அனுப்பி மாநாடு வெற்றியடையத்தக்க ஒத்துழைப்பு அளிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டும்,

6. மாவட்ட ஆரம்ப ஆசிரியர் சங்கத்துக்காக தயாரிக்கப்பட்ட ஆசிரியர்கள் நமூனைவை 30–8-50 தேதிக்குள் பூர்த்தி

செய்து மாநாட்டு காரியதரிசிக்கு அனுப்பும் படியாக எல்லா ஆ. ஆசிரியர் சங்கக் காரியதரிசிகளையும் கேட்டுக்கொண்டும்,

7. ஒவ்வொரு தாலுகாவிலும் தாலுகா ஆரம்பாசிரியர்கள் சங்கம் உடனடியாக நிறுவும்படியாக எல்லா காரியதரிசிகளையும் கேட்டுக் கொண்டும்,

8. a மாநாட்டு தினத்தில் மாவட்ட ஆரம்ப ஆசிரியர் சங்கம் நிறுவுவதென்றும்,

b. ஷை மாவட்ட சங்கம் நிறுவுவதற்கு ஒவ்வொரு தாலூகா சங்கமும் ஜில்லா போர்டு, முனிசிபல், பஞ்சாயத், எய்டெட், மிஷன் லேபர் முதலிய பாடசாலைகளிலிருந்து வகைக்கு ஒரு பிரதிநிதி வீதம் மெம்பர் தேர்வு செய்து (ஆண் பெண் இருபாலர்களிலிருந்தும்) 30-8-50 தேதிக்குள் மாநாட்டுக் காரியதரிசிக்கு அனுப்பும்படியாக எல்லாக் காரியதரிசிகளையும் கேட்டுக் கொண்டும்.

c. ஷை ஜில்லா சங்கத்துக்கு தேர்வு செய்யப்படும் மெம்பர்களிடமிருந்து மாகாண சங்கத்துக்கு மெம்பர்கள் தேர்வு செய்து அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு தீர்மானித்து முடிவு செய்யப்பட்டது.

திருப்புத்தூர்
20—7—40

கா.ப. சண்முகம்
பொதுக்காரியதரிசி.

34-ம் பக்கம் தொடர்ச்சி

மேற்சொன்ன பாரதியார் அவர்களின் பாடல்படி கல்வி அவசியம் என்பது நன்கு விளங்குகிறது. அதிலும் கிராமக் கல்வி மிக அவசியம் என்பதையும், கல்வியை பரப்பும் வகையையும், விளக்கிக்காட்டியிருக்கிறார். ஆகையால் கிராமக் கல்வியை மேலோங்கச் செய்ய வேண்டியது மிக அவசியம். ஆகவே நான் சொன்னபடி செய்து பரீக்ஷித்துப்பார்த்துக் கிராமக் கல்விக்குப் புத்துயிர் கொடுத்து மேலோங்கச் செய்ய வேண்டும். அப்படியல்லாமல் கவனியாது கல்வியின் ஆட்சியாளர்கள் இருப்பார்களானல் கிராமக் கல்வியைப் புதைத்துயிர் போக்கியதாகும்.

எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட்டில் சரியான வயதைக் குறிப்பிடுதல்

29 MAY 1955
MADRAS

கல்வி டைரெக்டர் விளக்கம்

சென்னை, பொது கல்வி டைரெக்டர் தெரிவிப்பதாவது: எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் வயதைத் திருத்திக் கொள்ள பல மாணவர்களிடமிருந்து ஏராளமான மனுக்கள் வந்திருக்கின்றன. சரியான வயதைத் தெரிவிக்கும் ஆதாரங்களுடன் அம் மனுக்கள் அனுப்பப்பட்டிருப்பது உண்மை தான். ஆனால் எஸ். எஸ். எல். ஸி. விதிகள் கீழ், ஒரு மாணவர் எஸ். எஸ் எல். ஸி பரீக்ஷை எழுதி பள்ளியிலிருந்து வெளியேறிய பின், சம்பந்தப் பட்ட மாணவரின் வயதை திருத்த அனுப்பப்படும் மனுக்களைக் ஏற்றுக் கொள்ள முடியாது.

மாணவர்களின் சரியான வயதை கண்டறிந்து எஸ். எஸ் எல். ஸி. சர்டிபிகேட்டில் எழுதுவதற்கு பள்ளிகளில் மிகவும் ஜாக்கிரதையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவ்விதம் செய்ய வேண்டும் என விதிகளும் இருக்கின்றன. எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட்டில் குறிப்பிட விரும்பும் வயதும் பள்ளி அட்மிஷன் ரிஜிஸ்டரில் உள்ள வயதும் வித்தியாசப் படாமலிருக்கும் ஆதாரம் ஏதும் கேட்கப்பட மாட்டாது. ஆனால் பள்ளி ரிஜிஸ்டரில் உள்ள வயது சம்பந்தப் பட்ட மாணவரின் சரியான வயது தான் என்றும், பிற்பாடு சரியான வயது கொடுக்கவில்லை என்ற காரணத்தால் திருத்தம் செய்யக் கோரப்பட மாட்டாது என்றும் பெற்றோர்களிடமிருந்து எழுத்து மூலம் வாக்குறுதி பெற்று பள்ளி மூலம் வாக்குறுதி பெற்று பள்ளிதஸ்தா வேஜுகளில் வைக்கப்படுகிறது.

அட்மிஷன் ரிஜிஸ்டரில் உள்ள வயதுக்கு வித்தியாசமாக எஸ். எஸ். எல். ஸி. ரிஜிஸ்டரில் வயது குறிப்பிட பெற்றோர்கள் விரும்பினால், சரியான வயதுக்கு ஆதாரம் காட்ட வேண்டும். 5-வது பாரத்தை மாணவர்கள் அடைந்த பிறகு பொதுவாக அவ்வித திருத்தங்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

எனவே எஸ் எஸ் எல் ஸி சர்டிபிகேட்டில் சரியான வயதைக் குறிப்பிடுவதற்கு மேற்படி விதிகள் பெற்றோர்களுக்கு போதிய அவகாசம் அளிக்கின்றன. பிற்பாடு மாறுதல்கள் செய்வதற்கு எதிர்பார்ப்பது நியாயமற்றதாகும்.

எந்த ஆதாரம் காட்டினாலும் அவ்விஷயத்தை பரிசீலனை செய்ய ஒரு தனி ஸ்தாபனம்

(38-ம் பக்கம் பார்க்க)

ஜனத் தொகைப்படி 'இடம்' தரவேண்டும்

28 ஆண்டுகளாக இருந்துவந்த வகுப்புநீதி சாய்கிறது

பாரிஸ்டர், ரங்கராமானுஜம் வீர உரை

வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை செல்லத்தக்கதல்லவென்று, சென்னை உயர்நீதி மன்றத்தார் தீர்ப்பு கிடைத்ததும், 'திராவிட நாடு' நிருபர் பாரிஸ்டர் ரங்கராமானுஜம் அவர்களைப் பேட்டிக்கண்ட போது கீழ்க்கண்ட அறிக்கையைத் தந்தார். திரு. இரங்கராமானுஜம் அவர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலும், நீதிக் கட்சியிலுமிருந்து பணியாற்றிய பிரபலவழக்கறிஞர் ஆவார்கள் அவரது அறிக்கை இது:—

1922-வது வருஷத்தில் ஏற்பட்ட கம்யூனல் ஜீ. ஓ. 1950-ல் ஏற்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி செல்லாது என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்து விட்டது. இதனால் சுமார் 28 ஆண்டுகளாக நம்முடைய மாகணத்தில் பெருவாரி மக்களுக்குக் கல்வித் துறையில் சாதகமாக இருந்த ஏற்பாடு ரத்தாகி விடுகிறது.

பரீட்சையில் மார்க்குமட்டுமே கருதப்பட வேண்டுமென்று குறிப்பிட்ட ஒருவகுப்பினரேதான் முன்னுக்கு வர முடியும். அது, முறையாக

(37-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதற்கு விதிகளில் அனுமதி கிடையாது. பொது ஜனங்களுக்குள்ள ஒரே வழி சிவில் கோர்ட்டுக்கு மனுச் செய்து கொள்ளலாம். கல்வி டைரெக்டருக்கு அம்மனுவை அனுப்பாததற்குக் காரணத்தைக் கோர்டுக்குத் தெரிவிக்க வேண்டும். தவிர பிரதிவாதியாக கல்வி டைரெக்டருக்கு ஏற்படும் செலவையும் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்க வேண்டும். கோர்ட்டு உத்தரவு பேரிலேயே சம்பந்தப்பட்ட மாணவரின் பிறந்த தேதியை (வயதை) கல்வி டைரெக்டர் மாற்றி எழுத முடியும்.

இப்போது பூரா நிலைமையையும் தெளிவாக விளக்கப்பட்டிருப்பதால் அம்மாதிரி மனுக்கள் அனுப்பியிருப்போர் தங்கள் வேண்டுகோள் உடனே பூர்த்தியாக வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது. மனுக்களை பரிசீலனை செய்து பார்க்க அவகாச மளிக்க வேண்டும். மாறுதல் செய்ய இயலாவிடில் அம் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

இருந்தால் நம்முடைய நாட்டில் ஒற்றுமை யென்பது சாத்திய மாகாது. இந்திய அரசியல அமைப்புச் சட்டத்தில் எல்லா வகுப்பாரும் கல்வித் துறையில் சமத்துவம் அடையவேண்டுமென்று சொல்லியிருக்கின்ற பகுதிகள் உபயோக மற்றவையாகிவிடும்.

இந்தத் தீர்ப்பு சரியோ சரியில்லையோ என்பது குறித்து நமக்கு விசாரமில்லை. பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களும், நீதிபதி விசுவநாத சாஸ்திரி அவர்களும் மாணவர்கள் வாங்கும் மார்க்படியே தான் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

ஆனால் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை (கம்யூனல் ஜீ. ஓ.) நியாயமானதென்று அபிப்பிராயப் படுகிறார் என்ற போதிலும், முடிவில் மற்றவர்களைத் தழுவியே தீர்ப்புத் தந்திருக்கிறார்.

மார்க்குப்படி தான் மாணவர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு எங்கேயும் ஆதாரமில்லை.

தகுதி (Merit) என்பதும், மார்க்குகள் என்பதும் ஒன்றல்ல.

தகுதி என்பது பலவிதமான அம்சங்களைக் கொண்டது. மார்க்கு என்பது பரீட்சையிலே ஒருவனுக்கு கிடைக்கின்ற எண்ணிக்கைதான். இந்த இரண்டும் ஒன்றாகாது.

உதாரணமாக, பிராம்மண வகுப்பைச்சார்ந்த கணித நிபுணரான இராமானுஜம் என்பவரை எடுத்துக்கொள்வோம். இவர் யூனிவர்சிடி பரீட்சையில் தோல்வியடைந்தார். ஏன்? மார்க்கில்லாமையால்! இவர் ஒரு உத்தியோகத்துக்குப் பிரயத்தனப்பட்டிருந்தால், சர்வீஸ் கமிஷன் இவரை எடுத்துக்கொள்ளாது, தள்ளிவிட்டிருப்பார்கள். ஆனால் அவரது பெயரும் கணித நிபுணத்துவமும் உலகப் பிரசித்தம். ஆதலால் மார்க்கு என்பதும் தகுதி (Merit) என்பதும் ஒன்றாகாது.

அப்படியே மார்க்குதான் முக்யமென்று எடுத்துக்கொண்டாலும் பரீட்சையில் பலவிதமாக மார்க்குகள் வாங்கப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பரீட்சை முடிந்த பிறகு, பதவியிலுள்ளவர்கள், பணமுள்ளவர்கள், அதிகார ஸ்தானங்களிலுள்ளவர்கள், தங்களுடைய பிள்ளைகளுக்கு அதிக மார்க்கு கிடைக்கவேண்டுமென்று எடுத்துக்கொள்ளும் பிரயத்தனம், விடைத்த தாட்களைத் திருத்துவோருக்கும் அத்துறையிலுள்ளமற்றவருக்கும் தெரிந்த விஷயம். இந்த வகையில் பிராமணப் பிள்ளைகளுக்கு அதிகமான மார்க்கு வாங்குவதற்கு

பலவிதமான செளகரியங்கள் இருக்கின்றன.

மயிலாப்பூர் பிராமணப் பிள்ளை, முதன்மையாகத் தேறினல், அது தன் சுய முயற்சியால் கிடைத்தது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. தண்டையார் பேட்டையிலுள்ள கிராமணிப் பிள்ளை இரண்டாவது வகுப்பில் தேறினல் "தகுதி" என்பது கிராமணிப் பையனுக்கே உரியதாகும். இரண்டாவது வகுப்பில் கிராமணிப் பிள்ளையும், முதல் வகுப்பில் தேறிய பிராமணப் பிள்ளையையும் ஒன்ருகக் கருதப்படவேண்டுமென்பது தான் நியாயம். இந்த நியாயத்துக்குப் பல வித ஆதாரங்கள் கூறலாம். இது நிற்க,

இனி, நாம் செய்யவேண்டியதென்ன? இந்தத் தீர்ப்பு சரியோ இல்லையோ என்பதைபற்றி சென்னை சர்க்காரே சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளப் போவதால், அதைப் பற்றி இப்போது நாம் கவலைப் படவேண்டியதில்லை. ஆனுலும், நம்முடைய நாட்டில் **உடனே ஒரு பெருங் கிளர்ச்சி உண்டாக வேண்டும்.**

சென்னை சட்டசபை, சட்ட மூலமாக ஸ்தாபனங்களை வகுப்புவாரியாகப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று பார்லிமெண்டுக்குச் சிபார்சு செய்யவேண்டும். பிராமணர்களுக்கும் (மார்க்கு படியல்ல) அவர்களுடைய ஜனத் தொகையின் படி ஸ்தானங்களைப் பிரித்து கொடுக்கும்படியாகக் கிளர்ச்சி செய்யவேண்டும்.

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திர கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்)	100	ரூ	2-8
ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்)	100	ரூ.	2-0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்)	100	ரூ.	2-0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்)	100	ரூ.	1-0

(தபால் செலவு உட்பட.)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ஊதியத்தில் ஒரு பங்கை நாட்டையாளும் அரசாங்கத்திற்கு பலவரிகளாக கொடுக்கின்றான். ஆகவே அரசியல் தொடர்பு எல்லா மக்களுக்கும் தொடர்ந்தே இருக்கின்றது. ஓட்டுரிமையும் வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆதலின் ஆசிரியர்களை மட்டும் அரசியலிலிருந்து பிரிப்பானேன்? வேண்டுமானால் ஆசிரியர் சங்கங்களில், அரசியல் சம்பந்தமான விஷயங்களை பேசக்கூடாது என்று கட்டளையிடலாம், அது நியாயமும் ஒழுங்குமாகும். ஆனால் அரசியலைப் பற்றி ஆசிரியர்கள்பேச வேண்டுமானால், பம்பாய் அரசாங்கத்தார் உத்திரவிட்டது போல ஆசிரியர்கள், அரசாங்கத்தாரால் தடைசெய்யப்படாத எந்த அரசியல் கட்சிகளிலும், சங்கங்களிலும் தங்கள் இஷ்டம்போல் அங்கத்தினராக சேர்ந்துகொள்ள, தங்கள் கருத்தை வெளியிட பேச உரிமை அளிக்கப்படவேண்டும். அப்படி செய்யப்படுமானால் ஆசிரியர்கள் அரசியலைப் பற்றி தங்கள் ஆசிரியர் சங்கங்களில் பேசமாட்டார்கள், அரசியலைப் பற்றி பேச அவர்களுக்கு வேறு வசதியிருப்பதினால். இதை மந்திரி மாதவனார் சற்று நிதானித்து ஆராய்ச்சி செய்தல் வேண்டும். அதை விட்டு ஆசிரியர் சங்கங்களை அரசியல் சங்கங்கள் என்று அங்கீகரிக்காமல் தடை செய்வது தவறு. அதைவிட பெருந்தவறு ஆசிரியர்களை அரசியலில் கலந்துக் கொள்ளக்கூடாது என்று, சொல்வது. மந்திரி மாதவனுருக்கு அரசியலில் எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமையும் உண்டு ஆரம்ப ஆசிரியர்களுக்கும் அரசியலில், அவர்களும் சுதந்திர நாட்டுப் பிரஜைகள், அரசாங்கத்திற்கு வரி கொடுக்கும் காரணத்தால். அரசியல் உரிமை ஆட்சி செய்யும் ஓர் கட்சிக்கு மட்டும் ஏகபோக உரிமையல்ல. இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு. ஆசிரியர் தொழில் கைக்கொள்பவர்களுக்கு அரசியலைப்பற்றி பேசவோ, அரசியலில்பங்கெடுத்துக் கொள்ளவோஉரிமை கிடையாது, ஆசிரியராக தொழிலைக் கொண்டவுடனே அடிமைகளாகத்தான் இருக்க வேண்டுமென்று ஓர் சட்டம்கல்வியிலாகாசட்டதிட்டில்சேர்த்து விடுவாரகளானல் மிக மிக நல்லது. நாட்டில் இனி அடிமை வாழ்வை விரும்புவர்களுக்குத்தான் ஆசிரியர் தொழில் என்ற புதுத்திட்டத்தை மக்கள்மன்றம்அறியட்டும். எத்தனை பேர் ஆசிரியர் பதவிக்கு முன் வருவார்கள் என்பதை ஆட்சியாளர் பிறகு அறிந்து கொள்ளட்டும். மாதவனார் இந்த அருமைச் சட்டத்தைச் செய்ய முன் வருவாரா ?

(43-ம் பக்கம் பார்க்க)

வள்ளுவர் கண்ட வளநாடு

(சேவற் கொடியோன்)

வள்ளுவர் ஓர் அறிவு நூற்புலவர்: தமிழினப் பற்றுடையவர்; தமிழர் பண்பாட்டை-மரபை அயலவர் அறியும்படியும், அறிவுக் கொவ்வாத அயலவற் கொள்கைகளை மறுத்து மதி கூறிய மக்கள் மன்றத் தலைவர். உலகுக்கு உணவளிக்கும் உழவனின், பெருமையை—உன்ன தஸ்தானத்தை உலகுக்கு உவந்தளித்த உத்தமர். அமைச்சருக்கு அறிவுரை பகரும் அறிவு ஏறு! இரந்துண்ணும் எளியவர்க்குப் பரிந்து பேசும் நாத்திகர்! கல்வியில்லா மக்கள் கண்ணற்றோர் என கடிந்துரைக்கும் பகுத்தறிவாசிரியர்! அரசியலறிஞர்! புரட்சிக் கவிஞர்! ஆம்! அவர் தான் தீந்தமிழர் வாழ்வின் படப் பிடிப்பாளர் திருவள்ளுவர்.

காலம் கடந்த வள்ளுவர் பல நூற்றாண்டுகளுக்கு முன்—மனிதன் நாகரீகப் படியில் கால் வைத்து ஏறாத காலத்தில் "நாடு" என்பது எப்படி இருக்க வேண்டும்? எத்தனையோ இயற்கை வளங்கள் உள்ளனவாக இருத்தல் வேண்டும் என்று கூறுவதைப்பாருங்கள்!

> "இருபுனலும் வாய்ந்த மலையும்
> வருபுனலும் வல்லரணும் நாட்டிற்
> குறுப்பு."

வளங் கொழிக்கும் நன்னாட்டிற்கு உறுப்புகள் வானம் வழங்கும் மழைநீர், பூமி வழங்கும் ஊற்று நீர், ஆற்றுநீர் உற்பத்தியின் உறைவிடமாகிய மாமலைகள், அம்மலையினின்றும் ஒருங்கே ஓடிவரும் ஆற்று நீர், அன்னியர் படையெடுக்காமல் இருக்க இயற்கை அரண், இவைகள் இயற்கையாயுள்ள நாடுதான் நல்ல நாடு என்று கூறுகிறார். இவ்வியற்கை வளங்கள் நம் நாட்டில் இல்லையா? பின் ஏன் நாட்டில் பஞ்சமும் பசியும் கோரத் தாண்டவமாடுகிறது?

ஆற்றின் குறுக்கே அணை போடுங்கள்; குளங்களையெல்லாம் சீர்திருத்துங்கள்; ஆங்காங்கே குழாய்க் கிணறுகள், கிணறுகள் தோண்டுங்கள்; தரிசு நிலங்களை யெல்லாம் சாகுபடி செய்யுங்கள்; காட்டைக் கழனியாக்குங்கள்; எல்லா வித உணவுப் பொருள்களையும் பயிரிடுங்கள் என பசியை ஒழிக்க பஞ்சத்தை ஓட்ட-பாடுபடுகின்றதே சர்க்கார்! இதைத் தான் அன்றே சொன்னார் வள்ளுவர். எல்லா வித தானிய விளைச்சல்களும் சாமை வரகு,நெல், முதலிய நவ தானியங்களும் விளையப் பெற்று மற்ற நாடுகளை நாடாமல் இருக்க வேண்டும் எனபதை;

> "தள்ளா விளையுளுந் தக்காருந்
> தாழ்விலாச்

செல்வருஞ் சேர்வது நாடு."
என்ற குறள் மூலம் விளக்கு கிருர். பல கிராமங்களில உணவுப் பொருள் இல்லாத தால் ரேஷன் கடையே திறக்க வில்லை"

"சேலம் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள கிராம ரேஷன் கடைகளில் வாரத்திற்கு ஒரு நாள் உணவுப் பொருளே கொடுக்கப் படுகிறது" "உணவுப் பஞ்சத்தால் மக்கள் புளியங் கொட்டையைத் தின்கிருர்கள்".

பத்திரிகைச் செய்தி

"பருத்திக் கொட்டையை மக்கள் உபயோகிக்கலாம்"

கனம் உ. ம. முன்ஷி "டாக்டர்கள் இல்லாததால் அதிக ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்த முடியவில்லை" ஜில்லா போர்டு தலைவர் ' உறு பசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ் சேராதியல்வது நாடு" குறள் மேலே குறிப்பிட்டுள்ள நாட்டின் நிலைக்கும் வள்ளுவர் குறளுக்கும் நிறைய சம்பந்தம் உண்டு!

குடிக்கக் கூழ் இல்லையே—உண்ண உணவு இல்லையே எனக்கதறிடும் பச்சைப் பாலகனும்: பணம் கொடுத்து பங்கீட்டுக் கடையில் அரிசி கிடைக்க வில்லையே என அலறிடும் பஞ்சைப் பாமரனும்; அண்டை ஊரில் அதிக விலைக்கு வந்த அரைப் படி அரிசியையும் அதிகாரிகள் பிடுங்கிக் கொண்டாரே என

(41–ம் பக்கம் தொடர்ச்சி)

கட்டாய ஆரம்பக்கல்வி இப்பொழுது கிடையாதாம்!

சென்னை மாகாண அரசியல் கல்லூரியில் பேசும் பொழுது தற்போது ஆரம்பக்கல்விக்கு ரூ.6 கோடி செலவாகிறதென் றும், மாகாணமுழுதும் கட்டாய ஆரம்பக்கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர சுமார் ரூ 20 கோடி ஆகுமென்றும் தற்போது அரசாங்கத்தில் பணம் இல்லாத காரணத்தால் மாகாண முழுவதும் கட்டாய இலவச ஆரம்பக்கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியாதென்றும் தெரிவித்துள்ளார்.

பணமில்லையா, அல்லது மனமில்லையா, என்பது நமது கேள்வி. ஒன்று டெல்லி அரசாங்கத்திற்குக் காவடி எடுத்தாவது நம் மாகாணத்திலிருந்து கொண்டு போகப் படும் சுமார் ரூ 60 கோடியில் தென்னாட்டின் கல்வி அபிவிருத்திக்காக ரூ.5 கோடியாவது வருடா வருடம் கொடுக்கும்படி மண்டி போட்டு கெஞ்சிக்கேட்கவேண்டும். அதுவும் முடியவில்லையானல், கல்விக்காக பொதுமக்களிடத்தில் கடன் வாங்கியாவது நாட்டின் கல்வியை வளர்க்க வேண்டும். இரண்டிலொன்றை அவசியம் செய்யலாம் மனமிருந்தால்.

அழுதிடும் மனைவியும்போன்ற; "உணவில்லையே கதியில்லையே" என்ற காட்சிகளை நாடோறும் காண்கிறோம். இக்காட்சிகளைத் தான் அன்றே "உறுபசி சேரா தியல்வது நாடு" என்று எடுத்துக் கூறியுள்ளார்.

கொதிக்கும் கும்பியை அடக்க கூழ் தான் இல்லையே! மக்கள் நோய் வந்தால் போக்க (லஞ்சமில்லா) மருத்துவ விடுதியாவது உண்டா? அதற்கு டாக்டர் இல்லை!

சில நாள் முழுப்பட்டினியும் பல நாள் அரைப் பட்டினியும் இருந்தால் இறந்து விட மாட்டார்கள் மக்கள். ஆனால் தொற்று நோய் வந்தால்? மக்கள் வாழ்க்கைப் படகைக் கவிழ்க்கும் கடும் புயலன்றோ தொற்று நோய்?

தீராத நோய் வரக்கூடாது; வந்தால் அதைத் தீர்ப்பது சர்க்காரின் இன்றியமையாக் கடன். அப்படிப்பட்ட நாடு தான் நாடு என்பதை "ஓவாப் பிணியும் சேரா தியல்வது நாடு" என்று கூறியுள்ளார்.

"நாட்டில் உண்ண உணவு இல்லை; குந்த குச்சு போதாது; நோய் தீர்க்கும் மருத்துவசாலை கிடையாது" என்ற எதிரொலி நாட்டில எங்கணும் கேட்ட வண்ணம் உள்ளது. அந்த எதிரொலி புரட்சியாக மாறுமல் இருக்க "உறு பசியும்...சேரா தியல்வது நாடு" என்ற குறல் வெண்பாவை ஆளும் வர்க்கத்திற்கு அளித்துப் போந்தார் அறிவுலகச் சிற்பியாம் நம் வள்ளுவர்.

"பஞ்சம் வராது—பஞ்சம் வராது" என சிந்துபாடுகிறார் மந்திரியார்! அரசாங்கம் பஞ்சம் வருவதற்கு முன் அறிந்து அதைத் தடுப்பதற்கான வழி வகைகளை செய்ய வில்லை செய்யத் தவறி விட்டது—மத்திய சர்க்காருக்கு மண்டியிட்டதால்!

நாட்டில் உணவுப் பஞ்சம் தாண்டவமாடுகிறது. அரிசி அரிசி என்று அலைகிறார்கள் மக்கள்.

சென்ற சில ஆண்டுகளாக நம் நாட்டில் பஞ்சம் இருப்பதும் அதற்காக ரேஷன் கடைகள் வைத்திருப்பதும் அது ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் "பற்றுக்குறை" அதிகமாகி அவதிப்படுவதும் கண்கூடு.

அப்படியிருக்க சென்ற ஆண்டில் சில ஜில்லாக்களில் பருவமழை தவறியதால் பயிர்கள் விளையாதது தெரிந்தும் பற்றுக்குறை அதிகம் என அறிந்தும் அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொள்ளாமலிருந்தது வருந்தத் தக்கது—கண்டிக்கத் தக்கது.

அரசாங்கம் உணவு விஷயத்தில் வீண் பிடிவாதம் இல்லாமலும், வெளிநாட்டுச் சரக்கு

உள் நாட்டுச் சரக்கு என்ற பேதம் பாராமலும் நம் நாட்டிலோ—வெளி நாட்டிலோ தேவையானஉணவுப்பொருளை வாங்கி—உற்பத்தி செய்து சேமித்து வைத்தல் அவர்களின் தலையாய கடனாகும். சேர்த்து வைத்துள்ள பொருள்கள் கெட்டுப் போகாமல் —புழுத்து நாசமாகாமல் காப்பாற்றி வைக்க வேண்டும் என்பதையும், அப்படிக் காப்பாற்றிய பொருள்களை நாட்டிலுள்ள எல்லா மக்கட்கும் தேவையான போது—தேவையான அளவு பகிர்ந்து அளிப்பது தான் முறை—நல்ல அரசு என்பதை யன்றோ வள்ளுவர்,

"இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த, வகுத்தலும் வல்ல தரசு"

என்ற வழிமுறை கூறியுள்ளார். இதை ஆளவந்தார்கள் அறிய வேண்டு மென அவாவுறுகிறோம்.

உழைத்து உழைத்துஉருக்குலைய ஒரு கூட்டமும் - உண்டு கொழுக்க ஒரு கூட்டமும்; பசி பசி என்று கதறிடும் பஞ்சைகள் ஒரு புறமும் — பசிக்கவில்லையே சாப்பாட்டு நேரம் வந்து விட்டதே என ஏங்கும் பங்களா வாசிகள் ஒரு புறமும்; பிச்சை யெடுத்துண்ணுவதே தங்கள் தொழிலெனக் கொள்ள ஒரு கூட்டமும்— தாங்கள் சாப்பிட்டு மீதியை —எச்சிலை நாய்களுக்கு போடுவது போல் சோற்றை வீசி எறியும் மாளிகையில் வசிக்க ஒரு கூட்டமும், இருக்கலாமா சுதந்திர—குடியரசு நாட்டில் என்று கேட்டால் அது அவனவன் "தலைவிதி" என்று வெகு சுலபமாக கூறி விடுவர் —விதி என்று கூறி வயிறு வளர்க்கும் சதிகாரர்கள்! விதி மனிதன் முயற்சிக்கு முட்டுக் கட்டை—அறிவுத் தேருக்கு சன்னக் கட்டை. விதியென்று ஒன்று கிடையாது. அது கடவுள் உண்டாக்கியது மல்ல— கயவர்களின் கற்பனைச் சொல். பிச்சையெடுக்கவே ஒரு கூட்டத்தை கடவுள் படைத்திருந்தால் அந்தக் கடவுள் வேண்டாம்—அழித்தே விடுங்கள்! என்ற கருத்தை "**இரந்து முயிர் வாழ்தல் வேண்டிற் பரந்துகெடுக உலகியற்றியான்**" என்ற இந்த குறள் மூலம் ஆத்திரத்துடன் கூறுகிறார் நமது வள்ளுவர்.

குடி மக்களின் குறையறிந்து—போக்கறிந்து, அவர்கள் பால் அன்பு செலுத்தி— நீதி தவறாமல்—அடக்குமுறையைக் கொண்டு அவனியாள எண்ணாமல் ஆளும் அரசாங்கத்தை ஆட்சியாளரை அந்நாட்டு மக்களும்—ஏன் உலகமே போற்றும் என்பதை அன்றே'**குடிதழீ இக் கோலோச்சு மாநில மன்னன் அடிதழீஇ வாழு முலகு.**" என்ற இக்குறள் வெண்பாவால் "நமது" அரசாங்கத்திற்கு அறிவுரை பகன்றுள்

(48-ம் பக்கம் பார்க்க)

பாடசாலையை நன்கு நடத்துக

R. Venkatachariar, H. M.
B. H. E. S. Idaiyur, Tiruthuraipundi Taluk.

1. மக்கள் வரிப்பணத்திலிருந்து கல்விக்காகப் பெறும் ஒவ்வொரு ரூபாய்க்கும் பெறுமானமுள்ள கல்வியை மக்களுக்கு அளிக்கவும்.

2. சம்பளப் பட்டியில் உள்ள ஊழியர்கள் பெயர் அளவில் இல்லாது ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் நன்கு உழைத்திருக்கிறோம் என்ற திருப்தியுடன் மாலையில் வீடு செல்லட்டும்.

3. அவ்வாறே மாணவர்கள் மனதிலும் அவரவர்கள் அவர்களாலியன்ற அளவு அதிகப்படியாக உழைக்கவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கவும்.

4. **உங்களால் இயன்ற அளவு அதிகப்படியாக வேலை செய்யுங்கள்** என்ற இயக்கத்தில் மற்றவர்கள் வேலை செய்வதை எதிர்பார்ப்பதோடு நீங்களும் பிரயாசை எடுத்துக்கொள்ளுங்கள்.

5. மூன்று R-கள் என்று கூறப்படும், வாசித்தல், எழுதுதல், கணக்குப்போடுதல் என்பவை எப்படிப்பட்ட புதிய முறை அமுலில் இருந்தாலும், முக்கியமே. அவற்றை அலட்சியம் செய்யவேண்டாம்.

6. உங்களுடைய மாணவர்கள் கல்வியில் தேர்ச்சிபெற்றுக் கொண்டே இருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டு வாளாவிருக்கவேண்டாம். அடிக்கடி மாணவர்கள் தேர்ச்சியைப் பரிசோதிக்கவும், முயற்சிதான் வெற்றியளிக்கும்.

7. கையிலிருக்கும் வசதிகள் எவ்வளவு குறைவாக இருந்தாலும், புதிய செயல் முறைகளைப் புகுத்தி, மாணவர்களை உற்சாகமாக வேலை செய்யப் பழக்கவும்.

8. ஜன சமூகம் நம்மிடம் எதிர்பார்ப்பதற்குச் சற்று அதிகமாகவே பாடசாலை இருக்கும்படி தொடர்ச்சியாகக் கவனித்துக்கொள்ளவும்.

9. நீங்கள் செய்யும் வேலையைப் பொதுமக்கள் அறியும்படி பிரசுரங்கள், பத்திரிகைகள், பிரசங்கங்கள், பெற்றோர்களைக் கண்டு பேசுதல் முதலியவைகளால் காட்டவும். இவ்வாறு செய்தால் பெற்றோர் ஒத்துழைப்பைப்பற்றிக் கவலையில்லை. சிலர் மேலே கூறிய எட்டு விஷயங்களையும் மறந்துவிட்டு, ஒன்பதாவது விஷயத்தை மாத்திரம் முதலில் ஆரம்பிக்கிறார்கள். ஆகையால் கஷ்டப்படுகிறார்கள்.

(போதனா விஷய பூங்கொத்து)

FORT ST. GEORGE GAZETTE

Government Examinations - Elementary School - Leaving Certificate Examination - March-April 1953- Revised syllabus in Elementary Science-Introduced.

It is hereby notified that the revised syllabus in Elementary Science for Standards VI—III of Elementary Schools has been published as a Supplement to Part I-B of the Fort St. George Gazette, dated 11th July 1950. The price per copy of this supplement is 9 pies,

2. The revised syllabus shall come into force immediately and be introduced as an additional compulsory subject in Standard VI during the current year (1950-51) itself, in Standard VII during (1951-52) and in Standard VIII during 1952-53.

3. The first Elementay School-Leaving Certifcate Public Examination according to the revised syllabus referred to shall be held at the end of the academic year 1952-53.

4. The fee for admission to the 1952-53 examination shall be raised from Rs. 2 to Rs. 2-8-0 per candidate.

Madras,
31st July 1950

D. S. REDDI,
Director of Public Instruction.

AMENDMENTS TO RULES RELATING TO GRANT OF RECOGNITION AND AID TO ELEMENTARY SCHOOLS.

(G. O. Ms. No. 1770. Education, 12th June 1950.)

AMENDMENT.

Chapter II - Rules for aid.

Rule I.—Under the heading "Scale of grants" after the existing entry relating to "Pandit" the following shall pe added as a note :—

NOTE.—A Pandit who does not possess the qualification referred to in rule 13 of Madras Educational Rules but who has passed the "Preliminary" Division of the Vidwan Title of the Madras, Andhra or Anna-

malai Universities and is appointed with exemption under rule 12 of the rules for recognition will be treated as an untrained teacher of the secondary grade for purposes of grant.

Amendments to rules relating to Tachers' Provident Fund.

(G. O. Ms. No. 1031, Education, 29th March 1950)

12. Witadrawal from the Fund towards payment of premia for life insurance policies :—(a) Withdrawal from the Fund is also permissible, at the option of the subscriber, to meet the payment towards premia for the policy of life insurance already taken by him. Such withdrawal shall be permitted only when the amount to be withdrawn does not exceed the subscriber's own share of contribution (management's share excluded) and when the payment of premia to the policy is only annual.

(45-ம் பக்கம் தொடர்ச்சி)

ளார். அன்பு வழியில் அரசு புரியும் சமதர்ம நாடு, ஏழை பணக்காரன் பேதமில்லாநாடு, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற உலுத்தர்தனம் இல்லாத நாடு, இயற்கை வளம் மலிந்துள்ள நாடு, கல்வி மணம் கமழும் நாடு, பட்டினிக் கொடுமை இல்லாத நாடு, பகைவரைக் கண்டு அஞ்சாத நாடு, தாய் மொழியையும் தன் மானத்தையும், பிறந்த பொன்னாட்டையும் பேணுகின்ற நாடு. அந்நாடே "வள்ளுவர் கண்ட வளநாடு"

வாழ்க வள்ளுவர் கருத்து!

Edited, Printed and Published by P. Veeraraghavan, in Venkatesan Press, 94/95 New St. Mannady, G. T. Madras.